Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 13 வெள்ளிக்கிழமை (28.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 089
















# வெள்ள அபாயத்தில் பல்லாயிரம் மக்கள்

## வான் பாய்கிறது இரணைமடுக்குளம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் அபாய அளவை எட்டியுள்ளதால் அக்குளத்தின் வான் கதவுகள் அனைத்தும் நேற்று இரவு முழுமையாகத் திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் இக் குளத்தின் கீழான கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த அனைத்து கிராமங்களிலும் அதனை அண்டிய பிரதேசங்க ளிலும் பெரும்வெள்ள அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இவ்விடயம் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்று பொது அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

இக்குளத்தின் நீரேந்துப் பகுதிகளில் கனமழை தொடர்ந்து பெய்துவருவதால் குளத்துக்கான நீர்வரத்து நேற்று இரவு சடுதி யாக அதிகரித்தது.

19 ஆம் பக்கம் பார்க்க



## நான்கு பல்கலைக்கழக மாணவர்களை பெற்றோர் நேரில் சந்திப்பு

கைது செய்யப்பட்டு வெலிக்கந்த புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரையும், அவர்களது பெற்றோர்கள் மற்றும் பல்கலைக்கழக பீடாதிபதிகள் நேற்று வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். சுமார் ஒருமணி நேரம் வரைநீடித்த இந்தச் சந்திப்பின் போது, தாம் எப்போது இந்த இடத்தில் இருந்து வெளியில் வருவோம் என எதிர்பார்த்து காத்திருப்பதாக மேற்படி மாணவர்கள் தெரிவித்ததாக சந்திப்பில் கலந்து கொண்ட பீடாதிபதி யொருவர் தெரிவித்தார்.

உளவளத்துணை எப்போது முடியுமென்றும் மாணவர்கள் எப போது விடுதலை செய்யப்படுவார்கள் என்ற விபரங்களையும் அறிந்து கொள்வதற்கு உரிய

19 ஆம் பக்கம் பார்க்க

## ஷிராணியின் பதவிக்கு ஆபத்து அரசின் அறிவிப்பு விரைவில்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரித்த நடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டதும். அது குறித்து ஜனாதிபதி நாடாளுமன்றுக்குத் தெரியப்படுத்துவார் என்றும் அதனைத் தொடர்ந்து ஷிராணியின் பிரதம நீதியரசர் பதவி பறிபோவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார். இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன தினம் இரவு நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

நாடாளுமன்றம், நிலையியற் கட்டளை, அரசியலமைப்பு மற்றும் சட்டம் ஆகியவற்றில் நாம் நம்பிக்கை கொள்கின்றோம். அரசியலமைப்பை செயற்படுத்தும்

19 ஆம் பக்கம் பார்க்க

## என்னைப் பதவிநீக்க முடியாது



(கொழும்பு)

அரசாங்க சார்பான ஊடகங்கள் தன்னை இழிவுபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க குற்றம் சாட்டியுள்ளார். பிரதம நீதியரசர், சிரேஷ்ட சட்டத்தரணிகள் போன்ற நீதிமன்றக் கட்டமைப்பை இழிவுபடுத்தும் நோக்கில் அரச ஊடகங்கள் திட்டமிட்ட போலிப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. அந்த ஊடகங்களின்

19 ஆம் பக்கம் பார்க்க

## விதிகளை மீறும் சுதேச மருத்துவர்கள் தடுத்துநிறுத்த அதிரடி சோதனை

(திருநெல்வேலி)

யாழ். குடாநாட்டில் உள்ள பல ஆயுர்வேத வைத்தியர்கள் தம்மை நாடிவரும் நோயாளர்களுக்கு ஆங்கில மருந்து வகைகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மருந்துகளை ஆயுரவேத வைத்தியர்கள் கையாள்வது விதிமுறைகளுக்கு முரணானது என அறிவிக்கப்பட்ட நிலையிலும் அது இவ் வைத்தியர்களினால் உதாசீனம் செய்யப்பட்டுளளது எனத்தெரியவந்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் கண்ணிவெடி அகற்றல் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பில்

### ஐ.நா.அமைப்புக்கள் "அவுட்"

ஐ.நா. அமைப்பின் கீழ் உள்ள மிதிவெடியகற்றும் செயற்பாடுகளை அடுத்த வருடம் முதல் பாதுகாப்பு அமைச்சு பொறுப்பேற்கவுள்ளதாகவும். ஐ.நா. பணியாளர்கள் யாவரும் வெளியேற்றப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. மிதிவெடியகற்றல் செயற்பாடுகளை ஐ.நா.வின் முகவர் அமைப்பின் உதவியுடன் வடபிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் இதுவரை மேற்கொண்டு வந்தது.

குறிப்பாக இறுதிப் போர் இடம்பெற்ற பகுதிகளான கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகியனவும் இதன் கீழேயே மிதிவெடியகற்றல் மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த ஜெனிவா அமர்வுகளின் போது அரசாங்கம் கொத்தணிக்

19 ஆம் பக்கம் பார்க்க

## கெட்டுப்போகும் சுகாதாரம்; யாழ். உணவகங்களில் சீர்கேடு

### முகம் சுளிக்கின்றனர் பொதுமக்கள்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தில் உள்ள பல உணவகங்களில் சுகாதார நடைமுறைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுவதில்லை எனப் பலராலும் குறை கூறப்படுகின்றது.

பல உணவகங்களில் இலையான்களின் ஆதிக்கம் அதிகளவில் காணப்படுகின்றன. உணவுகள் மூடிவைக்கப்படுவதில்லை. சமையல் பகுதி, கிணற்று நீர் என்பன துப்புரவாக இல்லை. வேலையாட்கள் வியர்வையுடனும அழுக்கடைந்த உடைகளுடனும்

19 ஆம் பக்கம் பார்க்க

# முல்லையில் தொடர் மழை; 600 குடும்பங்கள் பாதிப்பு

(மல்லாவி)

நாட்டில் தொடரும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்புயன் குளம் மற்றும் துணுக்காய் பிரதேசத்தின் 600 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 700 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது பெய்துவரும் தொடர் மழையால் குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதுடன், வீதிகளுக்கு குறுக்காக வெள்ளநீர் பாய்ந்து வருகின்றது. இதில் நட்டான்கண்டல், பன்னங்காமம், உழுவைநரி, கிளாலிக்குளம் போன்ற பகுதிகளில் வெள்ளம் பாய்வதால் சாட்டிக்குளம் கிராமத்துக்கான போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளதுடன், மக்களுடைய இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதில் இக்கிராமத்திலுள்ள 47 குடும்பங்கள் நட்டாங்கண்டல் பாடசாலையிலும், பொது நோக்கு மண்டபத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தேறாங்கண்டல் கிராமத்தில் உள்ள 150 குடும்பங்களும், மல்லாவி வடக்கு மங்கை நகர் கிராமத்தில் 100 குடும்பங்களும் தேராங்கண்டல் அ.த.க. பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதனைவிடத் துணுக்காய்ப் பாடசாலையில் 15 குடும்பங்களும், மல்லாவி, திருநகர் பாடசாலையில் 3 குடும்பங்களும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாடசாலைகளிலும், பொது நோக்கு மண்டபங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலருணவுப் பொருட்களை வழங்குவதற்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

மேலும், நட்டாங்கண்டல் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் நி.பிருந்தாபன் அனர்த்த உதவிகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

மேலும், அணிச்சயன் குளம் கிராமத்திலும் வீதிகளுக்கு குறுக்காக வெள்ளநீர் ஊடறுத்துப் பாய்வதால் இக்கிராமத்திலுள்ள மக்களைப் பாடசாலைகளிலும், பொது மண்டபத்திலும் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை பொது அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை, துணுக்காய்ப் பிரதேச செயலர் உள்ளிட்ட குழுவினர் தமது பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 20 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் சென்று அங்கு வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிட்டு வருவதாகவும், குடியிருப்புக்கள், வெள்ளத்தால் மூழ்கியுள்ள மக்களைப் பாடசாலையில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இம்மக்களுக்கு உலர் உணவுகளை வழங்குவதற்கும், இவர்களுடன் கிராம மட்டப் பொது மக்களும் இணைந்து துரிதமாகச் செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (143)

# பயிற்சிப் பட்டறை



(யாழ்ப்பாணம்)

'பாலியல் துன்புறுத்தலுக்கான சட்டத் தடவியல் பரிசோதனை' எனும் தொனிப்பொருளில் நீதவான்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கான ஒருநாள் பயிற்சி பட்டறை நேற்று யாழ். கிறீன் கிராஸ் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

நேற்றுக் காலை 10.00 மணிக்கு சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமான சிங்க தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பாலியல் தாக்குதல் தடயவியல் ஆதாரங்களை மையமாக கொண்டு தடயவியல் மருத்துவ அறிமுகங்கள் மற்றும் சங்கிலி மையமாக கொண்டு 'தடயவியல் மருத்துவ அறிமுகங்கள்' எனும் தலைப்பில் தடயவியல் மருத்துவத் திணைக்கள அதிகாரி சிவசுப்ரமணியம் மற்றும், டி.என்.ஏ. பகுப்பாய்வு பாலியல் தாக்குதல் மற்றும் 'டி.என்.ஏ சாட்சியங்களை வைத்து சிறப்பு முக்கியத்துவம் தடயவியல் விசாரணை' என்னும் தலைப்பில் சிரேஷ்ட விஞ்ஞானியும், மூலக்கூற்று ஆய்வுத்துறை அதிகாரியுமான ரூவன் எல்லைய பெருமா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (25)

# தீவகத்தில் கடற்கொந்தளிப்பு

யாழ்.குடாநாட்டில் தொடரும் சீரற்ற காலநிலையால் தீவகத்தின் நயினாதீவு பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை முதல் கன மழை பெய்து வருதாகவும், இதனால் கடல் கொந்தளிப்புக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்மழையால் இப்பிரதேசத்திலுள்ள மீனவர்களை தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், படகுப் போக்குவரத்தும் ஸ்தம்பித நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நேற்றுக்காலை 8.00 மணிக்கு குறிகாட்டுவான்-நயினாதீவுக்கான படகுப் போக்குவரத்து ஆரம்பமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நயினாதீவு கடற்கரையின் கிழக்குப் பகுதி அமைதியாக உள்ள நிலையில், மேற்குப் பகுதி கொந்தளிப்பாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், சீரற்ற காலநிலை நிலவும் சூழலிலும், தென்னிலங்கையிலிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் நயினாதீவுக்கு வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (175)

# குடத்தனைப் பாடசாலையில் கணினித் தொகுதி திருட்டு

(வடமராட்சி)

வடமராட்சி நடுக்குடத்தனை அ.மி.த.க. பாடசாலையில் கணினித்தொகுதி உள்ளிட்ட உபகரணங்கள் என்பன திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

அன்றைய தினம் இரவு பாடசாலை அதிபரது அறையின் மேற்கூரையின் ஓடுகளைப் பிரித்துக் கொண்டு உள்ளே இறங்கிய திருடர்கள் அங்கு இருந்த கணினி அறைத் திறப்பை எடுத்து திறந்து அங்கிருந்த ஒரு கணினி மற்றும் அதன் உபகரணங்ளை மிகவும் சாதுரியமாகத் திருடியுள்ளனர்.

இதன் பின்னர் மறுநாள் காலை பாடசாலை அதிபர் பாடசாலைக்கு வந்து தனது அலுவலகத்தினைத் திறந்தபோது ஓடுகள் உடைக்கப்பட்டு சிதறியிருப்பதையும், கணினி அறைக் கதவு திறக்கப்பட்டும் இருப்பதை அவதானித்ததுடன், கணினி களவாடப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாருக்கு தெரியப்படுத்திய நிலையில், பொலிஸார் அதிபரை அழைத்து விசாரணைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பாடசாலை விடுமுறைக் காலமாக உள்ள நிலையிலும், பாடசாலையில் புதிதாகத் தண்ணீர்த் தொட்டி அமைக்கும் பணியில் வேலையாட்கள் ஈடுபட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது. (116)

# 2 இராணுவத்தினருக்கு டெங்கு நோய் தொற்று

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இராணுவ முகாமைச் சேர்ந்த இரு இராணுவ வீரருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டு அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தப் படையினர் இருவரும் டெங்கு நோய்த் தொற்று ஏற்பட்ட நிலையில் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும், அதன் பின்னர் இவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சையின் நிமித்தம் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

ஏற்கனவே, இந்த இராணுவ முகாம் படையினர் பலருக்கு இவ்வாறு டெங்கு நோய்த் தொற்று ஏற்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தமையும் தெரிந்ததே. (பா)

# பாடசாலை மீண்டும் திறப்பு

(வேலணை)

யுத்த அனர்த்தங்களினால் அழிவுற்றிருந்த அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்காக திறந்து வைக்கப்படவுள்ளது.

இதேவேளை, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலையின் அதிபராகக் கடமையாற்றிய பத்மநாதன் இடமாற்றலாகி இப் பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (05)

# இன்றைய நிகழ்வுகள்

## தீரத்தோறசவம

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலய தீர்த்தோற்சவம் இன்று மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் காலை முதல் பக்தர்களின், காவடிகள் ஆலயத்திற்கு வருகை தரவுள்ளன.

இதில் பிற்பகல் 3.00 மணிக்கு தீருவூடல் நடைபெற்று சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமாள் வீதி வலம் வந்து ஆலயத்தின் உட்பிரகாரத்தில் அமைந்துள்ள பரமானந்த கூடத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது. (50)

## ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை, யாழ்.நகர மின் சேவையாளர் பணிமனையினரால் ஒளிவிழா இன்று காலை 10.00 மணிக்கு பணிமனையின் மின் அத்தியட்சகர் என்.அருள்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாசையூர் புனித் அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை றோம் பேடினன் அடிகளாரால் அருளுரை வழங்கப்படவுள்ளது.

தொடர்ந்து வழிபாட்டுடன் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. (27)

# வேலைகள் முடிவு

(வேலணை)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட கிரவல் வீதிகள் செப்பனிடுதல் போன்ற வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

மேற்படி வேலைகள் நிறைவடைந்துள்ளதால், இதற்கான அறிக்கையினைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (05)

# சைக்கிள்கள் திருட்டு; கைதடியில் கைவரிசை

(சாவகச்சேரி)

கைதடியில் இருந்து தூர இடங்களுக்கு பேருந்துப் பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் கைதடிச் சந்தியில் உள்ள தனியார் ஒருவரின் வீட்டில் நட்பு ரீதியாகச் சைக்கிள்களை நிறுத்தி வரும் நிலையில், தற்போது வீட்டுக்காரருக்குக் கூடத் தெரியாமல் சைக்கிள்கள் களவாடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீட்டில் கைதடியில் இருந்து தூர இடங்களுக்குப் பயணத்தை மேற்கொள்வோர் தமது வசதிக்காக துவிச்சக்கர வண்டிகளில் வந்து, இங்கு விட்டுப் பூட்டிவிட்டுக் கைதடிச் சந்தியில் நின்று பயணத்தை மேற்கொள்வதாகத் தெரியவருகிறது.

இந்நிலையில், தற்போது இவ்வாறு நிறுத்தப்படும் சைக்கிள்கள் சில இனந்தெரியாதவர்களால் களவாடப்பட்டுள்ளதாகவும், இக்களவு வீட்டு உரிமையாளருக்குக் கூடத் தெரியாமல் இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டப்படும் நிலையில், திட்டமிட்ட இக்களவு நடவடிக்கையைத் தடுக்க சைக்கிள் உரிமையாளர்கள் கவனம் செலுத்த வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (11)

# கிறிஸ்மஸ் ஒன்றுகூடலும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

குருநகர் சென். ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தின் கிறிஸ்மஸ் ஒன்றுகூடலும், கௌரவிப்பு நிகழ்வும் இன்று மாலை 5.00 மணிக்கு கழகத்தின் தலைவர் அ.யேசுதாசன் தலைமையில் குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக அருட்தந்தை ஆர்.எக்ஸ். நேசராஜா அடிகளார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பாலன் குடில் ஒளியேற்றல் நிகழ்வைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம் மற்றும் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 36 மாணவ, மாணவிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (27)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் – 2012

உறுப்புரை - 24

இளைப்பாறுகைக்கும், ஓய்விற்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையவர். இதனுள் வேலைசெய்யும் மணித்தியால வரையறை சம்பளத்துடனான காலாகால விடுமுறைகள் அடங்கும்.

# குற்றங்களில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## - நெல்லியடி பொலிஸ் அதிகாரி -

(கரணவாய்)



செல்வபுரம் பிரதேசத்தில் குற்றச்செயல்கள் இடம்பெறுவது குறித்து முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கின்றன. இந்நிலையில் இப்பிரதேசத்தில் குற்றச் செயல்கள் இடம்பெறுவதை தவிர்க்க பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நெல்லியடிப் பொலிஸ் சார்ஜன்ட் திஸாநாயக்கா தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி பொலிஸாரின் ஏற்பாட்டில் சிவில் பாதுகாப்புக் குழுவினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது மக்களுக்கு விளக்கமளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்,

இக்கிராமத்தில் பல்வேறு குற்றச்செயல்கள் ஆங்காங்கே இடம்பெறுவதாக பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இவற்றை முற்றாக நிறுத்துவதற்கு, பொது மக்களும் குற்றச் செயல்கள் இடம்பெற்றிருந்தால் அவற்றை உடனடியாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

அத்துடன் சிறுவர்கள் வீதிகளில் நின்று சமூக சீரழிவுகளில் ஈடுபடாது பாடசாலைக்கு செல்ல வேண்டும். அத்துடன் மது போதையில் இரவு வேளைகளில் தேவையில்லாது வீதிகளில் நின்று அரட்டை அடிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் தேவையில்லாத வீண் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

மேலும் முக்கிய பிரச்சினையாகவுள்ள டெங்கு நோய்த் தாக்கம் குறித்தும் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் எனவும் டெங்கு நுளம்பு பரவக் கூடிய வகையில் தமது சுற்றுச் சூழலை வைத்திருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவினரின் அறிவுறுத்தல்களை பின்பற்றாது மீண்டும் குற்றச் செயல்கள் இடம்பெற வழி ஏற்படுத்துவோர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நெல்லியடிப் பொலிஸ் அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு குழுவினர் பொது மக்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (18)

# டெங்குத் தொற்றால் மூவர் வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்காகிய மூவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலையின் தொற்றுநோய்த் தடுப்புப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கரவெட்டி, நல்லூர், சண்டிலிப்பாய் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்தே இவர்கள் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இவர்களுடன் இந்தமாதம் நேற்று முன்தினம் வரை 96 பேரும், இந்த வருடத்தில் 700 பேரும் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் மேலும் தெரியவருகிறது. (பா)

# ஆளணியினருக்கான வெற்றிடங்கள் நிரப்பல்

(வேலணை)

வட மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களில் நிலவி வந்த ஆளணிகளினது வெற்றிடங்கள் அடுத்த ஆண்டில் நிரப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் நிலவிவந்த ஆளணி பற்றாக்குறைகளினது விபரங்கள் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (05)

# நாட்டுக்கூத்து மன்ற ஒளிவிழா

(குருநகர்)

குருநகர் நாட்டுக்கூத்து மன்ற ஒளிவிழா நாளை சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு 20, கடற்கரை வீதி மன்றப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

மன்றத்தலைவர் கலைமாமணி கிறகரி கிறிஸ்தோப்பர் தலைமையில் நடைபெறுகின்ற விழாவில் வடமாகாண ஓய்வு பெற்ற வங்கியாளர் சங்கச் செயலாளர் அ.இராசநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பங்குத்தந்தை அருட்பணி ஆர்.சி.எக்ஸ்.நேசராசா அடிகளார் ஆசியுரை வழங்குவார். நிகழ்வில் 2012 ஆம் ஆண்டு கலாபூசணம் விருது பெற்ற மன்ற அங்கத்தவர் கிறகரி மக்கிமஸ் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார். (68)

# ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் மார்கழி மாத சஞ்சிகை வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

நூல் வெளியீட்டுரையை குப்பிளான் கிராம சேவையாளர் கோ.பரமநாதன், மதிப்பீட்டுரையை பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# மாணவர்கள் கௌரவிப்பு

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளை கௌரவிக்கவுள்ளது.

இந்நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் 4 ஆவது மாடியில் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (109)

# பெண்கள் வன்முறைக்கு எதிரான வாரம்; ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

பெண்கள் வன்முறைக்கு எதிரான வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டச் செயலகமும், பால் நிலைசார் வன்முறைக்கு எதிரான குழுவும் இணைந்து நடத்திய ஓவியப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பாடசாலை மட்டத்திலும், திறந்த பிரிவில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு,

பாடசாலை மட்டம்

ப.லஜீபன் (யா/ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயம்), கொ.அருள்ஞானகொன்சலன் (யா/மணற்காடு ஆர்.சி.ரி.எம்.பாடசாலை), ம.கீதானந்த் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜா.மாதங்கி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஜி.அருன்றோஜேர்ஸ் (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), ம.கீதாஞ்சலி (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

மேற்பிரிவு

ர.மதுனிகா (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), பா.கஜீபன் (யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), ல.லாவண்யா (யா/இந்து மகளிர் கல்லூரி), ப.பிரதாபன் (யா/ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயம்), பிரசாந்தி (யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), மு.கிரிசனா (கோப்பாய்)

திறந்த ஓவியப் போட்டி

ச.சர்மலா (கே.கே.எஸ்.வீதி மாவிட்டபுரம் தெல்லிப்பழை), சி.சுமணன் (வெள்ளாம் போக்கட்டி கொடிகாமம்), பாத்திமா அவ்றோஸ் அக்பர் (யாழ்ப்பாணம்)

# பொதுக்கூட்டம்

(வேலணை)

வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்துக்கு பொது மக்களால் ஆலயத்தினை நிர்வகிப்பதற்கான நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் முன்னாள் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயம் இதுவரை தனியார் ஒருவரின் மேற்பார்வையில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (05)



AAA மூவீஸ் இன்ரநசனல் நிறுவனத்தால் நடத்தப்பட்ட குறும்படங்களுக்கான போட்டியில் வெற்றி பெற்ற படங்களுக்காக விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பல்துறைசார்ந்த கலைஞர்களுக்கு விருது வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நிறுவனத்தலைவர் செவ்வேள் உரையாற்றுவதையும், மாணவியின் நடன நிகழ்வையும் துறைசார்ந்தவரால் கலைஞருக்கு விருது வழங்கப்படுவதையும் காணலாம்.

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## பூமிக்கு அழிவு எப்படி வரும்?

நாங்கள் வதந்திகளையும் பரபரப்புச் செய்திகளையுமே பெருமளவுக்கு விரும்புபவர்கள்; உண்மையை நேர்நோக்கக் கூசுபவர்கள் என்பது பலமுறை நிரூபணமாகியிருக்கிறது. உண்மை சுடும் என்பதால் மட்டுமல்ல, அது சுவாரஷ்யமும் அற்றது என்பதனால்தான் நாம் வதந்திகளிலேயே திளைக்க விரும்புகிறோம்.

சமீபத்திய பிரபல உதாரணம், கடந்த 21 ஆம் திகதி உலகம் அழியும் என்றும் அழியாது என்றும் கன்னை பிரிந்து நாம் எல்லோருமே பேசிக்கொண்டதுதான். அழியவில்லை அது வெறும் வதந்திதான் என்று அறிந்து கொண்டதோடு நாம் திருந்திவிடப் போவதில்லை. திரும்பவும் எங்காவது ஒரு குகைக்குள் உலகம் அழியும் திகதி செதுக்கி வைக்கப்பட்டிருப்பதை யாராவது பார்த்து அதன் சமிக்ஞை உடைத்துச் சொன்னதாக கதை பரவும் என்றால், இன்றைய ஊடக வளர்ச்சியின் புண்ணியத்தில் உலகம் பழசையெல்லாம் மறந்துவிட்டு மறுபடியும் ஒருதடவை பரபரத்து ஓயும்.

உலக அழிவு திடீரென்று எப்படி நேரும் என்பதற்குச் சொல்லப்படும் வழிகளில் பிரதானமான ஒன்று, அண்டவெளியில் சுற்றிக்கொண்டிருக்கும் கோடானுகோடி விண்கற்களிலோ (Asteroids) கிரகங்களிலோ ஏதாவது பாதைமாறி நம் பூமியின் மீது வந்து மோதிவிடலாம் என்பதாகும்.

ஆறு கோடி ஆண்டுகளுக்கு முன், ஒரு விண்வெளிப் பாறையினால் பூமி தாக்கப்பட்டது என்றும் அந்த தாக்குதலினால்தான் 'டைனோசர்' என்ற, அப்போது பூமியை ஆண்டுவந்த மிருகங்களை பூமி இழந்தது என்றும் கண்டறிந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, சின்னதும் பெரியதுமாய் பல கற்கள் பூமியின் மீது வெவ்வேறு காலகட்டங்களில் வந்து மோதி பலத்த அழிவுகளைத் தந்திருப்பதும் உண்மைதான்.

நம் கண்ணாலேயே அந்த மாதிரி தாக்குதலைப் பார்க்க ஒரு சந்தர்ப்பம் 1994 இல் கிடைத்தது. அந்த விண்கல் தாக்குதல் வியாழன் கிரகத்தின் மேல் நடந்தது. நம் மேல் வரும் பல தாக்குதல்கள் வியாழனின் ஈர்ப்புவிசையினால் வியாழனைத் தான் தாக்கியுள்ளன. தாக்குதல் நடந்தபின் பூமி அளவு பெரிய நெருப்பு வியாழனில் எரிவதை, மனித வரலாற்றில் முதன் முறையாக விஞ்ஞானிகளும் பிறரும் தொலைநோக்கியின் மூலமாக 'லைவ்' ஆக கண்டனர்.

வியாழனின் ஈர்ப்புவிசை தாண்டி புவியின் ஈர்ப்புவிசைக் குள்ளும் சில கற்கள் வரலாம் என்று கண்ட விஞ்ஞானிகள், அண்டவெளியிலும் தொலைநோக்கிகளை வைத்து, புவிமண்டலத்துக்கு அருகாக எந்தெந்தக் கற்கள் எவ்வெக் காலத்தில் வரும் என்று ஆராய்கிறார்கள். 24 மணிநேரமும் அண்டவெளியில் வெகுதொலைவுக்கு உன்னிப்பாகப் பார்த்தபடி இருக்கிறார்கள்.

எனவே, அவர்கள் பார்வைக்குத் தப்பி பூமிக்கு கற்கள் வரப் போவதில்லை. வருவது தெரிந்தால் அக்கற்களை அண்டவெளியில் வைத்தே சிறு சிறு துண்டுகளாக வெடித்துச் சிதற வைத்துவிடலாம் என்று முதலில் நினைத்தார்கள். அப்படியொரு பெரிய விண்கல்லை விண்வெளியிலேயே எதிர்கொண்டு அணுகுண்டால் வெடித்துச் சிதறவைப்பதாக ஹொலிவுட்டில் படங்களும் எடுக்கப்பட்டன.

இப்போது, அந்த சிரமமும் தேவையில்லை, அந்தக் கல்லின் பாதையை நகர்த்தி திசைதிருப்பி விட்டுவிடலாம் என்று கண்டிருக்கிறார்கள். முதலாவது முயற்சியாக விண்வெளியில் பூமிக்கும், சந்திரனுக்கும் நடுவே உள்ள பிரமாண்டமான விண்கல் ஒன்றை சிறிது நகர்த்தி வைப்பதற்கு ஏற்பாடாகிறது. இது வெற்றியான பிறகு விண்கற்களை மட்டுமல்லாது குறுங்கோள்களையும் கூட நகர்த்த முடியும் என்கிறார்கள்.

இனிமேல், பூமிக்கு ஆபத்து வருவதாக இருந்தால் அது மனிதர்களாகிய நம்மால்தான் என்பதே மேலும் தெளிவாகிறது.

- ஆசிரியர்

# புகலிடம் கிடைக்காத சுனாமி சிறுவர்கள் சிறுவர் பாதுகாப்பு சபைக்கு அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இதுவரை புகலிடம் கிடைக்காத சிறுவர்கள் இருப்பின், அவர்கள் குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவிக்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தகைய சிறுவர்கள் தொடர்பான தகவல்களை 1929 என்ற விசேட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு அதிகார சபையின் தலைவரும் சட்டத்தரணியுமான அனோமா திசாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

சுனாமி சட்டத்தின் பிரகாரம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குள்ள பொறுப்புகளை நிறைவேற்றும் செயற்பாடுகளின்போது சில பிரதேசங்களுடன் இணைப்புகளை ஏற்படுத்துவதற்கு கடந்த காலங்களில் அசௌகரியங்கள் காணப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சில சிறுவர்களுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் வழங்கப்பட வேண்டிய பராமரிப்புகள் உரியவாறு கிடைக்கவில்லை என்பது தற்போது தெரியவந்துள்ளதாக அவர் கூறினார்.

பிரதேச செயலகங்களுக்கு புதிதாக சேர்க்கப்பட்டுள்ள சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஊடாக தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ் மொழிப் பயிற்சி

(கொழும்பு)

வடக்கில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழிப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விசேட தமிழ் மொழிப் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மொழிப் பயிற்சி அளிக்க வேண்டியது அவசியமானது என தேசிய மொழிகள் அமைச்சு அறிவித்துள்ளது. ஐந்து மாதங்கள் இந்த மொழிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

# அலுவலகங்களை அமைக்க கனேடிய செஞ்சிலுவை உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு உட்பட்ட சங்கானை, பருத்தித்துறை, நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள இலங்கை செஞ்சிலுவை சங்கப் பிரிவு அலுவலகங்களை அமைப்பதற்கு கனேடிய செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை செஞ்சிலுவைச்சங்க சங்கானைப் பிரிவு அலுவலகத்தை அமைப்பதற்கு கனேடிய செஞ்சிலுவைச் சங்கம் 20 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

இந்நிதியுதவியுடன் பிரிவு அலுவலகம் அமைக்கும் பணிகள் ஆரம்பித்து நடைபெற்று வருவதாக வலி. மேற்குப் பிரிவுத் தலைவர் ரி.உதயசூரியன் தெரிவித்தார். நெடுந்தீவு, பருத்தித்துறை பிரிவு அலுவலகங்கள் அமைப்பதற்கும் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்விரு பிரிவுகளிலும் பிரிவு அலுவலகங்கள் அமைக்கும் பணிகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையினர் தெரிவிக்கின்றனர்.

# அறக்கட்டளை அமைப்பு காரைநகரில் உதயம்

(காரைநகர்)

காரைநகரில் கல்வி பயிலும் க.பொ.த.(சாதாரணதரம்), க.பொ.த. (உயர்தரம்) ஆகிய மாணவ, மாணவியர்களுக்கு அவர்களின் கல்வித் தேவைகளினதும், தகைமைகளினதும் அடிப்படையில் வருடா வருடம் நிதியுதவி வழங்கி ஊக்குவிப்பதற்காக, அமரர் கலாநிதி ஆ.தியாகராஜா ஞாபகார்த்தமாக அறக்கட்டளை அமைப்பு கடந்த 12 ஆம் திகதி கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலய சயம்பு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம், ஜனவரியில் இருந்து இவ் அறக்கட்டளை அமைப்பு உத்தியோகபூர்வமாக இயங்கவுள்ளது. இந்த நிதியம் வருடம் ஒன்றிற்கு ஒரு மில்லியன் ரூபாய்கள் வரை இக் கல்விச் சேவைகளென வழங்கவுள்ளது.

தனி ஒருவரால் வழங்கப்படும் இந்த நிதியுதவி, பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன், இவ் அறக் கட்டளை இருப்பு கணக்கிற்கு வருடா வருடம் (2028 வரை) வழங்கப்படும். மேற்படி அமைப்பின் நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக தலைவர் நடராஜா விஜயகுமார், செயலாளர் வேலுப்பிள்ளை சபாலிங்கம், பொருளாளர் செல்வி.விமலாதேவி விஸ்வநாதன், நிர்வாகசபை உறுப்பினர்களாக திருமதி.கமலாம்பிகை இலங்கேஸ்வரன், சண்முகம் சுகந்தன் ஆகியோர் தெரிவு செயயப்பட்டனர்.

# தொழில்நுட்ப பட்டதாரிகள் நியமனங்கள் இரத்தானது

(கொழும்பு)

கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்ற மறுப்புத் தெரிவித்த சுமார் 400. தொழில்நுட்ப பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பட்டதாரிகளின் நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இவர்களுடைய வெற்றிடங்களை நிவர்த்தி செய்யும் வகையில் காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுமென கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டபோது நியமனக் கடிதங்களில் அவர்கள் கடமையாற்றப்பட வேண்டிய இடங்கள் குறிப்பிட்டே வழங்கப்பட்டிருந்ததுடன் அப்பிரதேசத்தில் கடமையாற்ற தவறுபவர்களது நியமனங்கள் இரத்துச் செய்யப்படுமெனவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி தெஹியத்தகண்டிய, திம்புலாகல் உள்ளிட்ட கஷ்ட பிரதேசங்களில் கடமையாற்ற மறுப்பு தெரிவித்தவர்களுக்குப் பதிலாக காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுமெனவும் அமைச்சர் கூறினார்.

ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் அனைத்து பிரதேசங்களிலுமுள்ள மாணவர்களுக்கு சிறப்பான கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே தொழில்நுட்ப பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பட்டதாரிகள் 936 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதில் 400 பேரே தமது நியமனங்களை ஏற்க மறுத்துள்ளனர்.

இதனால் பின்தங்கிய கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கு தரமான கல்வியை பெற்றுக் கொடுப்பதில் சிக்கல்கள் எழுந்திருப்பதாகவும் இருப்பினும் காத்திருப்பு பட்டியலிலுள்ள பட்டதாரிகளை மேற்படி பாடசாலைகளுக்கு நியமனம் செய்யலாமென தான் நம்புவதாகவும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, ஆயிரம், ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் சுமார் 400 வரையிலான விண்ணப்பங்களே எமக்கு கிடைத்துள்ளன.

இலங்கையில் போதியளவு ஆங்கிலப் பட்டதாரிகள் இல்லாமையே இதற்கு காரணம். எனவே ஆங்கிலத்தில் டிப்ளோமா பயின்றவர்களை இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வது குறித்தும் நாம் ஆராய்ந்து வருகிறோம் என்று அமைச்சர் கூறினார்.

# தமிழ் அரசியலும் பெண்களும்

ஞானசக்தி-ராஜி



**பெண்கள் எந்த கட்சி, இயக்கம், அமைப்புடன் தம்மை அடையாளப்படுத்தியிருந்தாலும் சரி சமூக - இயக்க - அரச வன்முறைகள் அதிகாரங்கள் பெருஞ் சவால்களாக இருந்துவந்துள்ளன. மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளன. பெண்களின் நிலையில் முன்னேற்றகரமான மாற்றங்கள் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை.கடந்த காலங்களில் போராட்டங்களில் பங்கு பற்றிய தம் வாழ்நாளில் பெரும் பகுதியை அர்ப்பணித்த பெண்கள் இன்று அரசியலை விட்டு அந்நியப்பட்டது மட்டுமின்றி சமூகத்திற்கு தலைமறைவாகி ஒதுங்கி வாழும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சமூகத்தில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகள் பிரச்சினைகள் அனைத்துக்கும் முகம் கொடுக்கும் பெண்கள் அரசியலிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டிருப்பது மிகப் பெரிய சமூக அநீதியாகும்.**

இனப்பிரச்சினை தீவிரமடைய ஆரம்பித்த காலத்திலிருந்து தொடர்ச்சியாக பெண்கள் அரசியலில் போராட்டங்களில் பங்கு பற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் இன்று ஈழத்தமிழ் அரசியலில் பெண்களின் பங்கு நலிவடைந்து வருகிறது. இதற்கான காரணங்களை நாம் கண்டறிய வேண்டும். தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, இடதுசாரிக்கட்சிகளிலும், தொழிற்சங்கங்களிலும், பின்னர் பல்வேறு இயக்கங்களில் பெண்கள் அங்கத்துவம் வகித்திருக்கிறார்கள்.

1983 இனக்கலவரத்திற்குப் பின்னான காலப்பகுதியில் பெருந்தொகையான பெண்கள் இந்த இயக்கங்களில் இணைந்து செயற்பட்டனர். ஆனால் இன்று எந்த அரசியல் அமைப்புகளிலும் பெண்கள் அங்கத்துவம் வகிப்பதாகவோ, அல்லது இணைவதற்கு ஆர்வமுள்ளவர்களாக இருப்பதாகவோ அவதானிக்க முடியவில்லை. ஆரம்பத்திலிருந்தே பெண்கள் சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் போன்ற அஹிம்சை வழி .எதிர்பியக்கங்களில் தம்மையும் இணைத்துக் கொண்டனர்.

60. களின் முற்பகுதியிலிருந்து நிகழ்ந்த சத்தியாக்கிரக உண்ணாவிரத போராட்டங்களில் பெண்கள் கணிசமான அளவில் கலந்துகொண்டிருக்கிறார்கள். தமிழர்விடுதலைக் கூட்டணியின் பெண்கள் அமைப்பான தமிழ் மகளிர் பேரவையில் கணிசமான பெண்கள் உறுப்பினர்களாக அங்கத்துவம் வகித்தார்கள்.

அதைத் தொடர்ந்து ஆயுதப் போராட்ட இயக்கங்களிலும் பெண்கள் கணிசமான அளவு இணைந்து செயற்பட்டிருக்கிறார்கள். இப்போராட்டத்தில் தொடர்ச்சியாக பங்குபற்றிய, ஆதரவளித்த பெண்கள் பாரிய துன்பங்களை, சவால்களை, இழப்புக்களை அவமதிப்புக்களை, வேதனைகளை சந்தித்திருக்கிறார்கள்.

பொதுவாக இதில் ஈடுபட்ட பெண்கள் அது எந்தக் கட்சி, இயக்கம், அமைப்புடன் தம்மை அடையாளப்படுத்தியிருந்தாலும் சரி சமூக - இயக்க - அரச வன்முறைகள் அதிகாரங்கள் பெருஞ் சவால்களாக இருந்துவந்துள்ளன. மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளன.

பெண்களின் நிலையில் முன்னேற்றகரமான மாற்றங்கள் எதுவும் நிகழ்ந்து விடவில்லை. கடந்த காலங்களில் போராட்டங்களில் பங்கு பற்றிய தம் வாழ்நாளில் பெரும் பகுதியை அர்ப்பணித்த பெண்கள் இன்று அரசியலை விட்டு அந்நியப்பட்டது மட்டுமின்றி சமூகத்திற்கு தலைமறைவாகி ஒதுங்கி வாழும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அரசியல், சமூகப் பிரச்சினைகள் எதுவானாலும் சரி கலந்துரையாடும், தீர்மானிக்கும் உரிமைகளில் பெண்களுக்கும் பங்கிருக்கவேண்டும். ஆனால் சமகாலத்தில் அரசியலில் அரிதிலும் அரிதாகி விட்டது. ஆரம்பகாலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெண்கள் அமைப்பிலிருந்து இயக்கங்களின் பெண்கள் அமைப்புக்கள் வரை தீர்மானிக்கும் சக்திகளாகவோ, அமைப்புக்களின் பிரதான பகுதியினராகவோ இருக்கவில்லை.

சமூகத்தில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகள் பிரச்சினைகள் அனைத்துக்கும் முகம் கொடுக்கும் பெண்கள் அரசியலிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டிருப்பது மிகப் பெரிய சமூக அநீதியாகும். இயக்கங்கள் கட்சிகள் சாராத அன்னையர் முன்னணி போன்ற அமைப்புக்கள் குறிப்பிட்ட சில மனித உரிமை மீறல்கள் தொடர்பாக குரல் கொடுத்து இயங்கி வந்தன. அவை கூட இன்று இயக்கம் இன்றி போய்விட்டன.

பெண்களின். வாக்குக்களையும், உழைப்பையும் பெற்று அரசியல் செய்யும் கட்சிகள், தலைமைகள் பெண்களின் தீர்மானமோ கருத்துக்களோ அல்லது அவர்களின் பிரதிநிதித்துவமோ இல்லாமல் இருப்பது தவறானதென்று எந்த குற்ற உணர்ச்சியும் இன்றி செயற்படுகின்றன. தொடர்ச்சியான இயக்கமோதல்களும், சகோதரப்படுகொலை மாற்று அரசியல் கட்சிகள் தடைசெய்யப்பட்டமை, எந்த ஜனநாயக கருத்து சுதந்திரத்திற்கும் இடமில்லாமல் போனதும் மனிதர்களை அளவு கணக்கின்றி கொன்று குவித்ததும் பெண்கள் செயற்படுவதற்கான இடைவெளியை இல்லாமல் செய்தது. இயக்கங்களிலேயே பெண்களுக்கான தனித்துவம், கருத்து சுதந்திரம், தீர்மானிக்கும் உரிமைகள் இல்லாமல் போனது, பால் சார்ந்த அவமதிப்புக்கள் வன்முறைகள், புரிந்துணர்வின்மை, ஆண்கள் சார்ந்து செயற்படவேண்டிய நிலைமை இப்படி பல்வேறு காரணங்களால் தொடர்ந்து அரசியலில் பங்கு கொள்ளமுடியாமல் போனது.

கருத்தை கருத்தால் எதிர் கொள்ளும் பக்குவம் இல்லாத புலிகள் இயக்கம் விமர்சனத்தை முன்வைத்த மனித “பெண் உரிமை வாதியும் அறிவு ஜீவியும் ஆன ரஜனி திரணகம, கவிஞர் செல்வி போன்றவர்கள் உட்பட பல பெண்ணுரிமை வாதிகளின் வாழ்வை இருப்பை நிராகரித்தது. இவர்கள் மீது தம் வீரத்தை கட்டினார்கள்?? இந்த வீரர்கள்? தான் ஒருகாலத்தில் எங்கள் சமூகத்தில் துதிக்கப்படும் கதாநாயகர்கள்.

யாழ். நகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன், மனித உரிமை சட்ட அறிஞர் மகேஸ்வரி வேலாயுதம் மற்றும் அரசியலில் ஈடுபட்ட அரசியல் ஆர்வமுள்ள மாற்று கருத்துக் கொண்ட பெண்கள் இவர்களுக்கு நேர்ந்ததை பற்றி குறிப்பாக யாழ் பல்கலைக்கழக மனித உரிமை ஆசிரியர் சங்கம், மாற்று இயக்கங்கள்-கட்சிகள், சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை கண்காணிப்புக் குழு போன்றன மாத்திரமே கேள்வி எழுப்பின. கடந்த காலங்களில் (இப்போதும் கூட) தமிழ் ஊடகங்கள் பொதுவாகவே ஜனநாயகமாக நடந்துகொள்ளவில்லை. அவை புலிகளின் விருப்பத்திற்கு ஏற்பவே நடந்து கொண்டன. 1986 ஆம் ஆண்டிலிருந்து பெண்கள் தொடர்ச்சியாக கொல்லப்பட்டும், உரிமைகள் மறுக்கப்பட்டும், அவமானப் படுத்தப்பட்டும் வந்த சூழ் நிலைகளில் தமிழ் ஊடகங்கள் ஊமையாகத்தான் இருந்தன. 1991 இல் முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து உடுத்த துணியுடன் வெளியேற்றப்பட்டபோது பெண்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத துன்பங்களையும் அவமானங்களையும் சந்தித்தார்கள். பொதுவாகவே கடந்த காலத்தை மீள்பார்வை செய்வோமானால் பெண்களே பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அரச வன்முறைகளினால் பாதிக்கப் படும் வேளைகளில் குரல் எழுப்பிய ஊடகங்கள் புலிப்பாசிசத்தால் பெண்கள் கொல்லப்பட்டும்- கடத்தப்பட்டும் -அவர்களின் கருத்து சுதந்திரங்கள் பறிக்கப் பட்டும் அநியாயங்கள் இடையறாது அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருந்தபோது மௌனம் காத்தன.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் தனித்துவமான சுயாதீனமான பெண்களமைப்பின் அவசியம் உணரப்படுகிறது. கடந்த காலங்களில் போரட்டத்தில் இணைந்து செயற்பட்ட பெண்கள், வெவ்வேறு அமைப்புக்களில் இருந்தவர்கள் உட்பட இன்றைய நிலையில் கூட்டாக தமது பிரச்சினைகள் பற்றி விரிவான கலந்துரையாடலுக்கு தயாராக வேண்டும். கடந்த கால அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதும், தவறுகளை மீளாய்வு செய்வதும் தொடர்ந்து தமது அரசியல் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வதும்- உணர்த்துவதும் முக்கிய கடமையாகும்.

**1986 ஆம் ஆண்டிலிருந்து பெண்கள் தொடர்ச்சியாக கொல்லப்பட்டும், உரிமைகள் மறுக்கப்பட்டும், அவமானப்படுத்தப்பட்டும் வந்த சூழ்நிலைகளில் தமிழ் ஊடகங்கள் ஊமையாகத்தான் இருந்தன. 1991 இல் முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து உடுத்த துணியுடன் வெளியேற்றப்பட்டபோது பெண்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத துன்பங்களையும் அவமானங்களையும் சந்தித்தார்கள். பெண்கள் கொல்லப்பட்டும் – கடத் தப்பட்டும் – அவர்களின் கருத்து சுதந்திரங்கள் பறிக்கப்பட்டும் அநியாயங்கள் இடையறாது அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருந்தபோது ஊடகங்கள் மௌனம் காத்தன.**

அரசியல், சமூக, சாதி, மத வேறுபாடுகளுக்கப்பார்ல் பெண்கள் எதிர்நோக்கும் அநீதிகள் பால் ரீதியான சமத்துவமின்மைகள் அவமதிப்புகளுக்கு அது எங்கு நடந்தாலும் குரல் கொடுப்பதுடன் போராடவும் வேண்டும்.

கலந்துரையாடல் விவாதங்கள் ஊடாகத்தான் சரியான பாதையை நோக்கி பயணிக்க முடியும்.

# அரசியல் மீளிணக்கப்பாட்டிற்கு இராணுவ வெற்றி ஈடாக முடியாது

## அசோக் மேத்தா தெரிவிப்பு

(புதுடில்லி)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை அரசாங்கம் பெற்றுக் கொண்ட இராணுவ வெற்றி, அரசியல் மீளிணக்கப்பாட்டுக்குப் பதில்டாக அமைய முடியாது என்று இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்திய அமைதிப்படையில் பணியாற்றிய அவர், இந்திய ஊடகம் ஒன்றில் எழுதியுள்ள பத்தியில், போருக்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள திட்டங்களை பட்டியல் போட்டு சுட்டிக் காட்டியுள்ளார்.

மீள்குடியமர்வு, கண்ணிவெடிகள் அகற்றப்பட்டமை, பாதுகாப்பு வலயங்கள் சுருக்கப்பட்டமை, முன்னாள் போராளிகள் விடுதலை, காலாற்படைப் பிரிவுகள் மீள்நிலைப்படுத்தப்பட்டமை, பொருளாதார அபிவிருத்தி போன்ற மாற்றங்கள்



குறித்து அவர் இதில் பட்டியலிட்டுள்ளார்.

ஆனால் இன்னமும், அரசியல் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போரில் இலங்கை பெற்ற வெற்றியை நிலைநிறுத்துவதற்கு அதிகாரங்களைப் பகிரும் அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும், பொறுப்புக்கூறலும், மிக முக்கியமானவையாக உள்ளன என்றும் மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா தெரிவித்துள்ளார்.

# 24 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

தாய்லாந்தின் பாங்கொங் நகரின் கேளிக்கை விடுதி ஒன்றில் கலகத்தில் ஈடுபட்ட 24 இலங்கை இளைஞர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இளைஞர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். குறித்த இளைஞர்கள் சந்தேகத்திற்கு இடமான வகையில் செயற்பட்டதாக தாய்லாந்து பொலிஸார், இலங்கைப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட இளைஞர்களின் ஆள் அடையாளங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

# சட்டக்கல்லூரி பரீட்சை மீள நடத்த கோரிக்கை

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வு சர்ச்சைக்குரிய முறையில் நடைபெற்றதாக சட்டக்கல்லூரி நுழைவுக்கான மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, சட்டக் கல்லூரிக்கான பரீட்சையை மீள நடத்துமாறு அவ்வமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இம்முறை சட்டக்கல்லூரிக்கான பரீட்சையில் அதிகளவான முஸ்லிம் மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் மாதம் 7 ஆம் திகதி சட்டக் கல்லூரிக்கான மாணவர் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்த நிலையில் பரீட்சை வினாத்தாள்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் அல்லது பரீட்சைகளை மீள நடத்த வேண்டுமென சட்டக்கல்லூரி நுழைவுக்கான மாணவர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

# பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மீது வழக்குத் தொடர்வதற்கு முடிவு

(கொழும்பு)

பொலிஸ் ஊடகப் பேச்சாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் தமது வீட்டிற்கு அருகாமையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் தாமும் தமது புதல்வரும் வழங்கிய சாட்சிகள் முற்றிலும் முரண்பட்ட கருத்து என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் விடுத்திருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அவ்வாறான கருத்து வெளியீடுகள் மூலம் தமது உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏதேனும் சம்பவம் தொடர்பிலான சாட்சிப் பதிவுகள் குறித்து கருத்து வெளியிடுவது நீதிமன்றத்தைச் சவாலுக்கு உட்படுத்துவதாகும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபகஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவிக்கையில்,

நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷவின் உரிமை எனக் குறிப்பிட்டார்.

# கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவு மின்னல் தாக்கத்தால் சேதம்

(கொழும்பு)

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் மின்னல் தாக்கத்தால் சுமார் 15 கோடி ரூபா பெறுமதியான கதிர்வீச்சு சிகிச்சை வழங்கும் அலகொன்று முற்றிலுமாக சேதமடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

வைத்தியசாலையில் மொத்தம் 4 கதிர்வீச்சு சிகிச்சை வழங்கும் பிரிவுகள் உள்ளதாகவும் அதில் ஒரு அலகொன்றே மின்னல் தாக்கத்தால் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் தினசரி 100 நோயாளிகள் வரை சிகிச்சை பெற்று வந்ததாகவும் தெரிவித்தன.

இதனையடுத்து சிகிச்சை பெற வரும் நோயாளிகள் திருப்பியனுப்பப்படுவதாகவும் இதனை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு இன்னும் சில தினங்கள் செல்லும் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு நல்லிணக்கம் புகட்டும் ஜனாதிபதி



(கொழும்பு)

கருணாவும், கே.பியும் அரசாங்கத்தின் செல்லப்பிராணிகளாக உள்ளனர் எனினும் ஏதும் அறியாத தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனநாயக ரீதியாக செயற்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 4 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு விடுதலைப் புலிகள் என்ற முத்திரையுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் அவர்கள் மீது இன்னும் குற்றச்சாட்டுக்கள் எவையும் சுமத்தப்படவில்லை.

அவர்களின் பெற்றோர்களும் அவர்களை பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

அவர்களுக்கு நல்லிணக்கம் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தாம் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையே ஜனாதிபதி மறைத்து வைத்துக்கொண்டிருக்கிறார்

நாட்டின் தேசியப் பிரச்சினை தொடர்பில் உறுதியான கொள்கைகளில் இருந்து வெளிச்சென்று செயற்படாமல் இருக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட வேண்டும். தற்போதைய அரசின் செயற்பாடுகளால் பிரச்சினை மேலும் பெரிதாகிக் கொண்டு செல்வதுடன் அதனால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

தேசியப் பிரச்சினை தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு, பொதுநலவாய அமைப்பு உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களின் யோசனைகளுக்கு அரசாங்கம் வழங்கிய பொறுப்பற்ற பதில்களால் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான உறுதியற்ற கொள்கைகளில் இருந்து செயற்படுவதை அரசாங்கம் நிறுத்திக் கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நிவாரணப் பசளைகள் மழையால் கரைந்தன

(கொழும்பு)

கடந்த சில தினங்களாக பெய்த மழை காரணமாக சில களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டிருந்த அரச நிவாரண பசளைகள் கரைந்துள்ளதாக கமநல சேவைகள் மற்றும் வனவிலங்குகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சேத விபரங்கள் தொடர்பில் தற்போது மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாக பிரதி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

மழையினால் அம்பலாந்தோட்டை பசளை களஞ்சிய சாலை உள்ளிட்ட சில களஞ்சிய சாலைகளில் இருந்து பசளைகள் கரைந்துள்ளதாக கமநல சேவைகள் மற்றும் வனவிலங்குகள் பிரதி அமைசசர் குறிப்பிடடார்.

இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதுடன், விவசாயிகளுக்கு இலவச பசளைகளை வழங்குவதற்கு நடவடிககை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாகவும் அவர் கூறினார்.

பயிர் செய்யக்கூடிய வயல் நிலங்களுக்கு விதை நெல்லையும் பெற்றுக்கொடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, மழையுடன் கூடிய வானிலை காரணமாக இதுவரையில் ஒரு இலட்சத்து 72 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன.

அத்துடன் சுமார் 100 குளங்கள் சேதமடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை முதலிடம்

(கொழும்பு)

இணையத்தில் கூகுள் பக்கம் சென்று "செக்ஸ்" என்ற சொல்லை அதிகம் தேடும் நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு முதலிடம் கிடைத்துள்ளது.

கூகுள் போக்குகள் என்ற ஒரு பொது வலை வசதியில் இத்தகவல் கண்டறியப்பட்டுள்ளது.

செக்ஸ் என்ற வார்த்தையை அதிகம் தேடிய நாடுகள் பட்டியலில் இரண்டாம் இடம் இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது.

பப்புவா நியூகினி மூன்றாம் இடத்திலும் எத்தியோப்பியா நான்காம் இடத்திலும் பாகிஸ்தான் ஐந்தாம் இடத்திலும் பங்களாதேஷ் ஆறாம் இடத்திலும் வியட்நாம் 7 ஆம் இடத்திலும் நேபாளம் 8 ஆம் இடத்திலும் சோமாலியா ஒன்பதாம் இடத்திலும் கம்போடியா பத்தாம் இடத்திலும் உள்ளன.

# நாடாளுமன்று ஒத்திவைப்பு தீர்மானிக்கவில்லை ஜனாதிபதி

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்தி வைப்பது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்னமும் தீர்மானிக்கவில்லை என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்தி வைக்குமாறு சில இடதுசாரிக் கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன. பிரதம நிதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பிலான சர்ச்சைக்குத் தீர்வு காண, நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்தி வைப்பதே சிறந்த வழி என இடதுசாரிக் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்தி வைக்குமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையை ஜனாதிபதி ஆராய்ந்து வருவதாகவும், இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் மொஹான் சமரநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் நியமனம்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் கிளிநொச்சி மாவட்டத்திற்கென 4 அபிவிருத்தி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மிக அண்மையில் மாவட்டச் செயலகத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

மாவட்டத்தின் 4 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் குறித்த பிரதேச செயலகப் பிரிவுகளில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கடமைகளை பிரதேச செயலர்களின் பணிப்பின் பேரிலும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளரின் வழிகாட்டலின் மூலமும் கடமையாற்றவுள்ளனர்.

சமூக சேவைகள் அலுவலர்களால் அனர்த்த முகாமைத்துவ கடமைகள் ஆற்றப்பட்டு வந்த நிலையில் இந்நியமனம் அவர்களது வேலைச்சுமையைக் குறைக்குமெனவும் கூறப்படுகிறது. (90)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யக் கோரிக்கை

கிளிநொச்சி முக்கொம்பன் அ.த.க. பாடசாலையில் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை காணப்படுவதால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி - பூநகரிப் பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையில் 400 மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் அப்பாடங்களை கற்பதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் இதனால் பாதிக்கப்படுவதாகவும், இது தொடர்பாக உரியவர்கள் கவனம் எடுத்து இப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு மாணவர்களும், பெற்றோர்களும் கேட்டுக்கொள்கின்றனர். (கே)

## முரசின் இன்றைய பலன்

(28.12.2012 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 13 ஆம் திகதி. நட்சத்திரம் திருவாதிரை பிற்பகல் 6.11 வரை. திதி பூரணை பிற்பகல் 4.10 வரை.
இராகுகாலம் 10.58 12.28 வரை. சித்தாமிர்தம்
சுபநேரம் 6.28 - 7.58 வரை. பூரணை விரதம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நல்ல செயல்களில் நாட்டம். நண்பர் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில் இலக்கு நிறைவேறும். தாராள பணவரவு. |
| ரிஷபம் | இரக்க குணம் மிகும். பொறுமை. ஏமாறாமல் இருக்க கவனம் வேண்டும். வேலைப்பளு. கூடுதல் பணவரவு. உணவு கட்டுப்பாடு நல்லது. |
| மிதுனம் | முன்னேறும் வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். வியத்தகு செயல்கள் நடக்கும். தொழில் வளர்ச்சியில் புதிய பரிமாணம். தாராள பணவரவு. |
| கடகம் | பாராட்டும், எதிர்பார்த்த வெற்றியும். தொழில் சிறந்து, அதிக பணவரவு. வாழ்க்கைத்தரம் உயரும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி. |
| சிம்மம் | சகோதரரின் விருப்பத்துக்கு மாறாக பேசவேண்டாம். தொழில், புதிய யுக்தி அவசியம். எதிர்பார்த்த பணவரவு. வாகன பயணத்தில் கவனம். |
| கன்னி | குறை கேட்க நேரிடும். ஆடம்பர செலவை தவிர்க்கவும். தொழிலில் போட்டி. கடுமையான உழைப்புக்குப் பின் பணவரவு. திட்டமிட்ட பயணத்தில் மாறுதல். |
| துலாம் | மதிநுட்பத்துக்குப் பலன். தொழில் வளர அனுகூலம். தாராள பணவரவு. எதிர்த்தவர்கள் வியப்பு அடைவர். தான, தர்மம் செய்வீர்கள். |
| விருச்சிகம் | உங்கள் கவித்துவமான பேச்சு பிறர் சிந்தனையை தூண்டும். எதிரி தொல்லை குறையும். தொழில், புதிய பரிமாணம். சராசரி பணவரவு. |
| தனுசு | உண்மை, நேர்மை வழி. சமூகத்தில் வரவேற்பு. தொழில் தாமதம் விலகும். தாராள பணவரவு. இல்லறத்துணை ஆதரவு. குடும்பத்தில் ஒற்றுமை. |
| மகரம் | செயலில் உற்சாகம். எல்லோரிடமும் அன்பு. நண்பரால் நன்மை. தொழில் இலக்கு நிறைவேறும். உபரி பணவருமானம். உயர்ச்சிக்கான செய்திகள். |
| கும்பம் | மனதில் புத்துணர்வு. தொழிலில் இலக்கு பூர்த்தியாகும். சராசரி பணவரவு. உறவினர், நண்பர் உபசரிப்பு. பழைய கடன் வந்து சேரும். |
| மீனம் | போட்டி இருக்கும். புதிய சவால்களை விரும்புவீர்கள். கவனமுடன் செயல்படுவதால் தொழில் சிறக்கும். வெளியூர் நற்செய்தி. |

# ப.தெ.வ.கூ.சங்க கிளை பூநகரியில் திறந்துவைப்பு



உழைக்கும் வர்க்கத்தின் கரங்களைப் பலப்படுத்தி அவர்களின் வாழ்க்கையினை ஓர் உன்னத நிலைக்கு கொண்டு வருவதில் எமது கட்சி திட சங்கற்பம் கொண்டு செயற்பட்டு வருகிறது என ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பூநகரியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஐம்பது இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பூநகரி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் கிளையினைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் எப்பொழுதும் உழைக்கும் தொழிலாளர்களின் வாழ்க்கையினை மேம்படுத்துவதில் அதிக அக்கறை கொண்டு செயற்றிட்டங்களை வகுத்து செயற்பட்டு வருகின்றோம் அந்த வகையில் பனை தென்னை வள தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களின் நலன்களில் அதிக அக்கறை கொண்டு பெருமளவு நிதிகளையும் செலவு செய்து வருகின்றோம் குறிப்பாக கைதடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பனை ஆராய்ச்சி நிறுவனமும் இதன் ஓர் அங்கமே இதன் மூலம் எதிர்காலத்தில் இத்துறைக்குள் நவீன முறைகளை எவ்வாறு கையாண்டு நவீன முறையிலான தொழில் நடவடிக்கைகளுடன் அதிக வருமானத்தை ஈட்டக் கூடிய வழிவகைகள் அறிமுகப்படுத்தப்படும். அது மாத்திரமன்றி இத்துறையின் உற்பத்திகளுக்கு நல்ல சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதன் விளைவால் இத்தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் எதிர்காலத்தில் மேம்பாட்ட நிலைக்குச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை தொழிலாளர்கள் ஒற்றுமையாக தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் தொழிலாளர்களிடம் காணப்படுகின்ற ஒற்றுமையே அவர்களின் முன்னேற்றத்திற்கான பலம் என அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர் வசந்தகுமார், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், இராணுவ அதிகாரி கேணல் மஞ்சுள குணசிங்க, மீள் எழுச்சித்திட்ட, துரித மீட்சிதிட்ட பிரதி திட்டப்பணிப்பாளர் விஜய கிருஸ்னண், ஈ.பி.டி.பி.யின் பூநகரி இணைப்பாளர் நிர்மல றொபின்சன் சங்கத்தின் அங்கத்தவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## கடைகள் நிர்மாணம்

(வேலணை)

வேலணை செட்டிபுலத்தில் உள்ள வெட்டுக்குளத்தின் அருகில் புதிதாக இரண்டு கடைகளை அமைப்பதற்கு வேலணை பிரதேசசபை நிர்வாகம் முன்வந்துள்ளது.

இதற்கென 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் வெகு விரைவில் இரண்டு கடைகளை கட்டுவிப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



சுனாமி அனர்த்தத்தினால் காவு கொள்ளப்பட்டவர்களை நினைவு கூரும் தேசிய பாதுகாப்பு தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் அனர்த்தத்தின் போது உடனடியாக செயற்படும் வகையில் அனர்த்தப்பரிவு ஒன்று உருவாக்கப்பட்டதுடன் அப்பிரிவின் அங்கத்தவர்களுடன் அரச அதிபர் உள்ளிட்ட அதி காரிகள் நிற்பதைக் காணலாம். (142)

# இடம்பெயர்ந்தோர் தொகை மன்னாரில் அதிகரித்தது

### முசலிக்கான தரைவழித் தொடர்பும் துண்டிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கின் காரணமாக இதுவரை 1297 குடும்பங்களைச் சேர்ந்த 3919 பேர் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸ் தெரிவித்தார்.

இந்த நிலையில் மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 255 குடும்பங்களைச் சேர்ந்த 872 பேரும், முசலி பிரதேச செயலர் பிரிவில் 421 குடும்பங்களைச் சேர்ந்த 1814 பேரும், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 611 குடும்பங்களைச் சேர்ந்த 1233 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இந்த மக்கள் 10 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட தம்பனைக்குளம், கட்டையடம்பன் ஆகிய கிராமங்களும், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரை, இராசமடு, இசைமாளத்தாழ்வு, அச்சங்குளம் ஆகிய கிராமங்களும், முசலி பிரதேச செயலர் பிரிவுக்குற்பட்ட மருத மடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

இதே சமயம் முசலி பிரதேச செயலர் பிரிவில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்குமான தரைவழிப்பாதைகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளமையினால் இந்த மக்கள் வெளியேற முடியாத நிலையில் உள்ளனர். இதனால் முசலியில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஏற்பட்டுள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை நானாட்டான் பிரதேச செயலர் சி.ஏ.சந்திரய்யா மேற்கொண்டு வருகின்றார்.

# 2018 உலக கால்பந்துத் தொடர் ரஷ்யாவில் மைதானம் புனரமைப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவில் 2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்துப் போட்டிக்காக தலைநகர் மொஸ்கோவிலுள்ள லுக்கினிக்கி மைதானம் முற்றாக இடிக்கப்பட்டு புதிதாக கட்டப்படவுள்ளது. ஐரோப்பா முதல் ஆசியா வரை பரந்து விரிந்துள்ள ரஷ்யாவில் நடைபெறும் முதல் உலகக் கிண்ணப் போட்டியை மிகச் சிறப்பாக நடத்திக்காட்ட ரஷ்ய அரசு தீவிர நடவடிக்கைகளை தற்போதிருந்தே எடுத்து வருகிறது.

தலைநகர் மொஸ்கோ, செயின்ட் பீட்டர்ஸ் பார்க், கசான் உள்ளிட்ட 11 நகரங்களில் 2018 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டித் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரின் இறுதி ஆட்டம் மொஸ்கோவில் உள்ள லுக்கினிக்கி மைதானத்தில் நடைபெற உள்ளதாக உலக கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது இதையடுத்து உலகக்கிண்ண போட்டிக்காக லுக்கினிக்கி மைதானத்தை முற்றிலும் இடித்துவிட்டு புதிய மைதானத்தை கட்ட ரஷ்ய அரசு முடிவு செய்துள்ளது. ரஷ்யாவில் புகழ்பெற்ற இந்த மைதானத்தில் கடந்த 1980 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. மேலும் கடந்த 2008 ஆம் ஆண்டு செல்சி, மான்செஸ்டர், யுனைடெட் அணிகள் மோதிய ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதி ஆட்டமும் இங்கேதான் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# ருவென்ரி-20 கிண்ணம் தென்னாபிரிக்கா வசம்



(போர்ட் எலிசபேர்த்)

நியூசிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது ருவென்ரி-20 போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது.

இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரின் கிண்ணத்தை தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக் கொண்டது.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் போர்ட் எலிசபேர்த்தில் இடம்பெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைக் குவித்தது. இதில் ஹென்றி டேவிட்ஸ் 51 பந்துகளில் 68 ஓட்டங்களையும், ஜஸ்டின் ஒன்ரொங் 30 பந்துகளில் 48 ஓட்டங்களையும், டேவிட் மில்லர் 15 பந்துகளில் 28 ஓட்டங்களையும், பர்ஹான் பெஹர்டியன் 11 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் க மிற்சல் மக்லநகன், டக் பிரேஸ்வெல் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 180 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 33 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் பிரென்டன் மக்கலம் 25, மாட்டின் குப்ரில் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றயன் மக்லரன், அரோன் பங்கிசோ தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக் ஹென்றி டேவிட்ஸ் தெரிவானார்.

# வலுவான நிலையில் அவுஸ்ரேலியா



(மெல்போர்ன்)

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மைக்கல் கிளார்க்கின் சிறப்பான ஆட்டத்துணையுடன் அவுஸ்ரேலிய அணி வலுவான நிலையைப் பெற்றுள்ளது.

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி மெல்போர்னில் நடைபெற்று வருகின்றது.

இதில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்து. நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த கிளார்க், வட்சன் இணை இலங்கை அணிப் பந்துவீச்சாளர்களைப் புரட்டியெடுத்து ஓட்ட வேகத்தை அதிகரித்தது. இவர்களைப் பிரிக்க இலங்கை அணியால் பல வியூகங்கள் வகுத்தபோதும், 194 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளையே பிரிக்கப்பட்டது. இருப்பினும் தொடர்ந்து வந்த வீரர்கள் சராசரியாக ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தபோதும், வேகப்பந்து வீச்சாளர் மிச்சல் ஜோன்சன் பதம் பார்த்து ஆடும் அளவிற்கு இலங்கை அணியின் பந்து வீச்சு படுபரிதாபமாக இருந்தது. இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, அவுஸ்ரேலிய அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 440 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் கிளார்க் 187 பந்துகளை எதிர்கொண்டு 14 பவுண்டரிகள் அடங்கலாக 106 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் கிளார்க்



பெற்றுக் கொண்ட 22 ஆவது சதமாக இது பதிவானது. மற்றும் வட்சன் 83 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். 133 பந்துகளை எதிர்கொண்டுள்ள ஜோன்சன் ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளார். பந்து வீச்சில் பிரசாத் மூன்று, எரங்க இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இரண்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் அவுஸ்ரேலிய அணி 284 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது. இலங்கை முதல் இனிங்ஸ் 156. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# கடும் போட்டி



இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் ருவென்ரி-20 போட்டிக்கான டிக்கெட்டுகளை பெற, இரசிகர்கள் இடையே கடும் போட்டி நிலவுகிறது. ரூ. 300 மதிப்புள்ள டிக்கெட், கள்ளச்சந்தையில் ரூ. 2,500இற்கு விற்கப்படுகிறது.

இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் இரண்டாவது போட்டி, இன்று அஹமதாபாத்தில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் இரு அணி வீரர்கள் நேற்று அஹமதாபாத் சென்றனர். இதனிடையே, இப்போட்டியைக் காண, இரசிகர்கள் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர். டிக்கெட்டுகளை பெற மைதான நுழைவு வாயிலில் ஆயிரக்கணக்கில் குவிந்தனர். டிக்கெட் பெறுவதில் இவர்களுக்கு இடையே தள்ளுமுள்ளு ஏற்பட, பொலிஸார் தடியடி நடத்த வேண்டியதாயிற்று. இதற்கிடையே, கள்ளச் சந்தையில் டிக்கெட் விற்பனை அமோகமாக நடக்கிறது. இப்போட்டிக்கு ரூ. 300 மதிப்புள்ள டிக்கெட் ஒன்றின் விலை, ரூ. 2,500 வரை விற்கப்படுகிறது. இதனால், சாமான்ய இரசிகர்கள் போட்டியைக் காண முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

# கால அவகாசம் வேண்டும்

நீண்ட இடைவெளிக்குப்பின் போட்டியில் பங்கேற்பதால், வழமையான ஆட்டத்திற்குத் திரும்ப, சிறிது கால அவகாசம் தேவைப்படுமென நடால் தெரிவித்தார். ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல்-4 இடத்தில் உள்ளவர் ஸ்பெயினின் நடால், இடது முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக, யு.எஸ். ஓப்பன், லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவில்லை.

இந்நிலையில் தனது உடல் நிலை குறித்து நடால் கூறுகையில், அபுதாபி தொடர் என் உடல்தகுதி குறித்த பரிசோதனை மட்டுமே. காயத்தில் இருந்து மீள்வது மட்டுமே என் நோக்கம். அடுத்த இரண்டு மாதங்களுக்கு, போட்டியில் கிடைக்கும் முடிவுகளை பற்றி கவலைப் படமாட்டேன். இதேவேளை, மார்ச்மாதம் நடக்கவுள்ள பரிபாஸ், மியாமி தொடரில்தான் என் திறமையான செயற்பாடு தொடங்கும். 600இற்கும் மேற்பட்ட ஏ.டி.பி. தொடர்களில் விளையாடியுள்ளேன். பிரெஞ்ச் ஓப்பன் தொடரில் சம்பியன் பட்டமும் வென்றுள்ளேன். எனவே, இந்த இடைவெளி காரணமாக, சிறப்பான ஆட்டத்தை நான் மறந்துவிடவில்லை. பல மாத இடைவெளிக்குப் பின், போட்டிகளில் பங்கேற்பதால், மீண்டும் வழமையான ஆட்டத்திறனுக்கு வர, சிறிது கால அவகாசம் தேவை மேலும் தெரிவித்தார்.

# வெலகெதர காயம்

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சானக வெலகெதரகாயமடைந்துள்ளார். அவுஸ்ரேலிய, இலங்கை அணிகளுக்கிடையிலான 2ஆவதுடெஸ்ட் போட்டியின் 2ஆவது நாளிலேயே அவர் காயமடைந்துள்ளார். போட்டியில் தனது 15ஆவது ஓவரை வீசியபோது அவரது வலது பின்தொடைப் பகுதியில் உபாதையேற்பட்டு அவர் மைதானத்தை விட்டு வெளியேறினார்.

அவரது உபாதையையடுத்து அவர் ஸ்கான் பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளார். ஏற்கனவே விக்கெட்டுக்களைக் கைப்பற்றத் தடுமாறிவரும் இலங்கை அணி சானக வெலகெதரவின் இழப்பினையடுத்து மேலும் அழுத்தத்திற்குள்ளாகியுள்ளது.

ஏற்கனவே இலங்கை அணியின்விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்தனவின் பெருவிரலில் ஏற்பட்ட என்பு முறிவையடுத்து குமார் சங்கக்கார விக்கெட் காப்பாளராகப் பணியாற்றிவரும் நிலையிலேயே தற்போது சானக வெலகெதரவின் உபாதையும் ஏற்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக உபாதைகள் காரணமாக கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றிவந்திருக்காத சானக வெலகெதர, நீண்ட காலத்திற்குப் பின் இத்தொடரிலேயே முதன்முறையாகப் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அஸ்வின் இல்லாதது ஆச்சரியமளித்தது



(அஹமதாபாத்)

இந்திய அணியில் அஸ்வின் விளையாடாதது எங்களுக்கு ஆச்சரியம் அளித்தது. இந்த ஆட்டத்திற்கு அஸ்வின் இல்லாத அணியே சிறப்பாக இருக்கும் என்று அவர்கள் விரும்பியிருக்கிறார்கள். ஆனால், அவரைத் தவிர்த்து, இந்திய அணியில் உலகத்தரம் வாய்ந்த சுழற்பந்து வீச்சாளர்கள் யாரும் இல்லை என பாகிஸ்தான் அணியின் ருவென்ரி-20 கப்டன் மொகமட் ஹபீஸ் தெரிவித்தார்.

யுவராஜ்சிங் நல்ல ஆட்டத்திறனுடன் இருக்கிறார் என்பது தெரியும். இருப்பினும் உலகத்தரம் வாய்ந்த சுழற்பந்து வீச்சாளர் இல்லாத போது அதன் பின்னர் அந்த அணி மீது எம்மால் ஆதிக்கம் செலுத்த முடியும். அதன் அடிப்படையில் நாங்கள் வியூகத்தை வகுத்தோம். அதில் வெற்றியும் பெற்றோம். இன்றைய போட்டியிலும் வென்று தொடரை வெல்ல முற்படுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அஸ்வின் ஏன் அணியில் இணைக்கப்படவில்லை என இந்திய அணியின் கப்டன் டோனி குறிப்பிடுகையில், அஸ்வின் எங்கள் அணியின் பிரதான பந்து வீச்சாளர். அவர் முதல் 6 ஓவர்களில் (பவர் பிளே) சிறப்பாக பந்து வீசியிருக்கிறார். இந்த ஆட்டத்தில் 3 வேகப்பந்து வீச்சாளர்களுடன் இறங்க முடிவு செய்த போது, சகலதுறை வீரர் ஜடேஜாவுக்கும் வாய்ப்பு அளிக்க விரும்பினோம். ஏனெனில் கடந்த இரு ஆட்டங்களை எடுத்துக்கொண்டால் அஸ்வின் கொஞ்சம் அதிகமான ஓட்டங்களை விட்டுக்கொடுத்திருந்தார். என்றாலும் அவர் தொடக்க ஓவர்களில் நேர்த்தியாக பந்து வீசினார். பாகிஸ்தான் அணியில் நிறைய வலது கை துடுப்பாட்ட வீரர்கள் இருந்தனர். எனவே அவர்களை கட்டுப்படுத்த வலது கை சுழற்பந்து வீச்சாளர் தேவைப்பட்டால் அந்த பணியை செய்ய ரோகித் ஷர்மாவும், சுரேஷ் ரெய்னாவும் இருந்தனர். மாறாக இடதுகை சுழற்பந்து வீச்சாளர் என்று வரும் போது யுவராஜ்சிங் மட்டுமே இருந்தார். அவர் மோசமாக பந்து வீசி விட்டால் மாற்று வழி இல்லாமல் போய் விடும் என்பதால் தான், இன்னொரு வாய்ப்பாக இடதுகை சுழற்பந்து வீச்சாளர் ஜடேஜாவை சேர்த்தோம் என்றும் டோனி விளக்கம் கொடுத்தார்.

# சிறந்த மெய்வல்லுநர்களை யாழில் உருவாக்கத் திட்டம்

## யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவர் ரமணன்

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டில் யாழ். மாவட்டத்தில் சிறந்த மெய்வல்லுநர் வீர,வீராங்கனைகளை உருவாகக் கூடிய வழிவகைகளை மேற்கொண்டிருக்கின்றோம் என யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவர் செ. ரமணன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின், மெய்வல்லுநர் பயிற்றுநர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று கடந்த 23ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், எதிர்காலத் திட்டங்கள் குறித்து எமது செய்தியாளர் தயாளபாலனுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த ஆண்டில் பாடசாலை மட்ட தேசிய போட்டிகளில் அதிகளவிலான வீர, வீராங்கனைகள் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றிருப்பதில் மகிழ்ச்சி. இருப்பினும் இந்தப் பெறுபேறுகள் இன்னும் அதிகரிக்கப்படவேண்டும். இதற்காக நாங்கள் அனைவரும் முழு மனதுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயற்படவேண்டிய தேவை பயிற்றுநர்களாகிய எங்களுக்கு இருக்கின்றது. அடுத்த ஆண்டு இன்னும் சிறந்த வீர,வீராங்கனைகளை நாம் உருவாக்க வேண்டும். இதற்கான வேலைத்திட்டங்களை நாங்கள் விரைந்து மேற்கொள்ளவேண்டும். அந்த வகையில் அடுத்த ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் பயிற்றுநர்களுக்கு கருத்தரங்கு நடத்துவதற்கான ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம். இது எமது வளர்ச்சிக்கும், வீர, வீராங்கனைகளின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றும் என எதிர்பார்க்கின்றேன். அடுத்த ஆண்டு யாழ். மாவட்டத்திற்கும், வடமாகாணத்திற்கும் பெருமை சேர்க்கக் கூடிய பல வீர,வீராங்கனைகளை உருவாக்க முயற்சிக்க வேண்டும். அவ்வாறான பல வீர,வீராங்கனைகள் எமது பிரதேசத்தில் இருப்பதை நான் அறிவேன். அவர்களை நாம் இனங் கண்டு வெளிக்கொணர்ந்து, சிறந்த பயிற்சிகளை வழங்குவோமானால் நிச்சயம் குறித்த இலக்கை எங்களால் அடைய முடியும் எனவும் தெரிவித்தார். (93)



## உறவுப்பால கரப்பந்து ஏற்பாடுகள் துரிதம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணிக்கும், இரத்தினபுரி மாவட்ட தெரிவு அணிக்குமிடையில் இடம்பெறும் வடக்கு,தெற்கு உறவுப்பால கரப்பந் தாட்டத் தொடர் விரைவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

வடக்கு, தெற்கு உறவை வலுப்படுத் தும் வகையில், தெல்லிப்பளை மகா ஜனாக் கல்லூரி அணிக்கும், மாவட்டத் தெரிவு அணிக்கும் இடையில் கடந்த வருடம் முதல் உறவுப்பால கரப்பந் தாட்டத் தொடர் இடம்பெற்று வரு கின்றது. கடந்த வருடம் இப்போட்டி இரத்தினபுரியில் இடம்பெற்றது.

இந்நிலையில் எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதியில் இப்போட்டியை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடத்த ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும், போட்டி நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடு களையும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மேற்கொண்டு வருவதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்த னர். (93)




## தேசிய மட்ட மேசைப்பந்துப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆசிய - ஜேர்மன் விளையாட்டு பரிமாற்ற நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக அகில இலங்கை ரீதி யாக தரப்படுத்தப்பட்ட வீர,வீராங்கனைகளுக்கான மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஒன்று எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2,3ஆம் திகதிகளில் கொழும்பு நுகேகொட சென். ஜோன்ஸ் கல்லூ ரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டி திறந்த போட்டியாக நடைபெறவுள்ளது. இதில் எட்டு வயது முதல் 21 வயதுப் பிரிவு ஆண், பெண் என இருபாலா ரும் பங்குகொள்ள முடியும் எனவும், பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்களை யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் மோகனுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்று, ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும், சான்றிதழ்களும் வழங் கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வென்றது ஐயனார்

(வேலணை)

வேலணை பிரதேச கடற்படையின ரால் நடத்தப்பட்ட கஞ்சதேவ ஞாபகார்த்த கால்பந்தாட்டத்திற்கான வில-கல் முறை சுற்றுப்போட்டியில் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியில் வேல-ணை பிரதேசத்தைச் சேர்ந்த 7 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றின.

இறுதிப்போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளை யாட்டுக்கழக அணியினை எதிர்த்து துறையூர்ஐயனார் விளையாட்டுக்கழக அணி மோதியது. இரு அணி களுமே பலமான அணி என்பதால் போட்டி பெரும் பரபரப்பாக இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. அதே போன்று ஆட்டம் முடியும்வரை இரு அணி களும் கோல் எதனையும் போடவில்லை. இதனால் சமநிலை உதைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 3 : 1 என்ற கோல் கணக்கில் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

## இன்றைய ஆட்டம்

(மாதனை)

வடமராட்சி மாதனை கிராம மக்கள் மற்றும் மாதனை விளையாட்டுக்கழகத்தின் லண்டனில் உள்ள நலன் விரும்பிகள் ஆகியோரின் ஆதரவுடன் மாதனை விளையாட்டுக் கழகத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடர் இன்று முதல் பருத்தித்துறை மாதனை விளையாட்டுக்கழக மைதானத்தில்இடம் பெறவுள்ளது.

ஒவர் முறையில் இடம்பெறவுள்ள இக்கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஐந்து பேர்களைக் கொண்டதாகும். இன்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை இச்சுற்றுப் போட்டி நடைபெறும் என்றும், இச்சுற்றுப் போட்டியில் வடமராட்சியைச் சேர்ந்த முன்னணி கரப்பந்தாட்ட அணி கள் பல பங்குபற்றவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். போட்டியில் வெல்லும் அணிக்கு கிண் ணத்துடன் பெறுமதி வாய்ந்த பரிசில் களும் வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## 2ஆவது ஆட்டம் இன்று

(அஹமதாபாத்)

இந்திய, பாகிஸ்தான் அணிகளுக் கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொட ரின் இரண்டாவது போட்டி இன்றைய தினம் அஹமதாபாத்தில் நடைபெறவுள் ளது.

ஏற்கனவே, பெங்களூரில் நடைபெற்ற முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கின்றது. இந்நிலையில் இப்போட்டியிலும் வென்றுத் தொடரை வெல்லும் முனைப்புடன் களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மற்றும் கல்வித் திணைக்களத்தினால் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வர்ண விருது விழா நிகழ்வில் விருது வென்ற கராத்தே வீர,வீராங்கனைகளையும், கராத்தே ஆசிரியர்களையும் காணலாம். கடந்த மூன்று வருடமாக இடம்பெற்று வரும் இவ்விருது வழங்கும் நிகழ்வில், இந்த ஆண்டே கராத்தே போட்டிக்கான விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

இராணுவத்தில் இணைந்த தமிழ்ப்பெண்கள் பற்றி தொடர்ந்தும் பல விதமான செய்திகளும், கட்டுரைகளும் நாளுக்கு நாள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பெண்களின் நலன்களை கிஞ்சித்தும் கருத்தில் எடுக்காமல் தங்களின் அரசியல் இலாபங்களுக்காக தமிழ்த்தேசியத்தின் பெயரால் மிகக் கேவலமாக மானபங்கம் படுத்தி வருகின்றார்கள். இங்கு நான் வெளிப்டையாகவே கூறுகின்றேன் இராணுவத்தில் இணைந்துகொண்ட 109 இளம் வறுமையில் வாழ்கின்ற பெண்களை கேவலப்படுத்துவதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்கள் தனது சகோதரனின் ஊடகங்களையும் உள்ளூரிலுள்ள ஒரு சில இளம் ஊடகவியலாளர்களையும் வைத்துக்கொண்டு மிகத்தாராளமாகவே நடந்துகொண்டார்.

அந்தப் பெண்களினதும் அந்த குடும்பங்களினதும் அந்த சமூகத்தினதும் வாக்குகளை பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக வந்தவர் எப்படி வாய் கூசாமல் நாகரீகமின்றி அந்தப் பெண்களின் வாழ்க்கையினை சீரழிக்கும் வகையில் கடுகளவேனும் யோசிக்காமல் அந்தப் பெண்களை இராணுவம் தங்களது பாலியல் தேவைகளுக்கே பயன்படுத்துகிறது என்று கூறியிருக்கிறார். சாதாரண ஒரு கிராமத்தில் வாழ்கின்ற எங்களுடைய சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பெண்கள் விடயத்தில் ஊர்ச்சந்திகளில் நான்கைந்து பேர்கள் மத்தியில் பேசுவதாக இருந்தால் கூட பொம்பிள பிள்ளை விசயம் சந்தியில பேசுவது சரியல்ல என்கிற வார்த்தைகள் வரும். ஆனால் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் அந்தப் பிள்ளைகளின் கௌரவத்தை கண்மூடிக்கொண்டு குழித்தோண்டி புதைத்து வருகின்றார். இப்படியொரு மிகக் கேவலமான அரசியல் செய்யத்தான் வேண்டுமா?

இவ்வாறானவர்கள் தாங்கள் எதைஎதையெல்லாம் நினைக்கின்றார்களோ அதையெல்லாம் கண்மூடிக்கொண்டு செய்வார்கள். அதனை எந்த ஊடகமோ அல்லது ஊடகவியலாளர்களோ, அல்லது எந்தவொரு சமூகபொறுப்புமிக்க தனிநபர்களோ எதிர்த்து நியாயம் கேட்டால் தமிழ்த்தேசியத்தின் பெயரால் அவர்களை தமிழ்த்தேசியத்திற்கு ஏதிரானவர்கள் துரோகிகள் அரசின் கைக்கூலிகள் என முத்திரை குத்திவிடுவார்கள். இதுதான் இவர்களின் வழமையான பாணியாக இருந்து வருகிறது.

# தமிழ்த் தேசியத்தின் பெயரால் செய்யும் கேவலம்!



- சுவர்ணா கட்டுரையிலிருந்து.



உலக அளவில் பிரபலம் பெற்ற சிங்களத் திரைப்பட இயக்குனர் அசோக ஹந்தகமவின் புதிய தமிழ்த் திரைப்படம் இனி அவன். இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் அதனுடன் தொடர்புபட்டு வெளியிடப்பட்டுள்ள முதலாவது தமிழ்த் திரைப்படமாகும். இத்திரைப்படம் இலங்கையில் மட்டுமல்ல அனைத்துலக ரீதியிலும் பலமான எதிர்பார்ப்பை பெற்றுள்ளது.

# இனி அவன்

"நான் இத்திரைப்படத்தின் ஊடாக இதனைப் பார்வையிடும் சிங்களவர்களுக்கு செய்தி ஒன்றைக் கூற விரும்புகிறேன். "முன்னாள் புலி உறுப்பினன்" எப்போதும் "கூடாதவனாக" சித்தரிக்கப்படுகிறான். இவர்கள் சமூகத்தில் எதிர்மறையான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகிறார்கள். இதனை ஒரு சவாலாகக் கொண்டே நான் இத்திரைப்படத்தை தயாரித்துள்ளேன்" என "இனி அவன்" திரைப்படத்தின் இயக்குனர் அசோக ஹந்தகம தெரிவித்துள்ளார்.

டுபாய், ரொறன்ரோ மற்றும் எடின்பெரோ போன்ற இடங்களில் இடம்பெற்ற மூன்று அனைத்துலக திரைப்பட விழாவில் வரவேற்பையும் விருதையும் இத்திரைப்படம் பெற்றுக் கொண்டது.

"குறிப்பாக ரொறன்ரோ மற்றும் டுபாய் போன்ற இடங்களில் இத்திரைப்படம் தொடர்பாக நேரடி கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம். அதேபோன்று இந்தப் படம் பற்றி இலங்கைக்குள் இருந்து வரும் பிரதிபலிப்புகளைப் பெற்றுக் கொள்வதற்காக நான் காத்திருக்கிறேன்" எனவும் ஹந்தகம குறிப்பிட்டுள்ளார்.



அசோக ஹந்தகம

இத்திரைப்படமானது தமிழர் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை தழுவி உருவாக்கப்பட்ட ஒன்று ஏன்பதை ஏற்றுக்கொள்ள இயக்குனர் ஹந்தகம மறுத்தார். இது யுத்தத்தின் பின்னான சமூகத்தின் பிரச்சினைகளை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் மீளவும் தனது சமூகத்துடன் இணைந்து புதிய் வாழ்வொன்றை வாழ முயற்சிக்கிறார். இவர் நீண்ட ஆண்டுகளின் பின்னர் தனது சொந்தக் கிராமத்திற்கு திரும்பி வருகிறார். இங்கே புதிய வாழ்வொன்றை ஆரம்பிக்க எண்ணும் போது, அவரது கிராமத்தவர்கள் இவரை எதிர்க்கின்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இவர் பணியாற்றிய போது அதில் இணைத்துக் கொள்ளப்பட்ட தமது பிள்ளைகளின் மரணத்திற்கு இந்த முன்னாள் புலி உறுப்பினரே காரணம் என அந்தக் கிராமத்தவர்கள் கூறுகின்றனர். தமது பிள்ளைகள் உயிருடன் திரும்பி வராதபோது இவன் மட்டும் தனது வாழ்வைத் தொடர்வதா என அவர்கள் இவரின் முயற்சிகளுக்கு தடைபோடுகின்றனர்.

இதன் பின்னர் இவன் தான் திருமணம் செய்து கொள்வதன் மூலமே இயல்பு வாழ்வொன்றை வாழ முடியும் என நம்புகிறான். காவலர் வேலை ஒன்றில் இணைகிறான். ஆனால் இவன் காவலாளியாக பணிபுரியும் நகைக் கடையானது வெளியில் நகைக்கடையாக தெரிந்தாலும் உண்மையில் போதைப் பொருட் கடத்தல் இடம்பெறும் இடமாக இருக்கிறது.

இந்நிலையில் தான் இயல்பு வாழ்வொன்றை வாழ்வதற்கு நீண்ட காலம் தேவை என்பதை இவன் உணர்ந்து கொள்கிறான். தனது முதலாளியின் உதவியுடன் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு உதவ முன்வருகிறான். ஆனால் முதலாளி கணவனை இழந்த அந்தக் குடும்பத்தின் விதவைப் பெண்ணை தனது சுயநலத்திற்காக பயன்படுத்திக் கொள்கிறார். இதிலிருந்து முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் தனது புதிய வாழ்வில் பிறிதொரு புதிய பாடமொன்றைக் கற்றுக்கொள்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் ஒருவர் எவ்வாறு நேர்மனப் பாங்குடன் வாழ முடியும் என்பதை இத்திரைப்படத்தில் தோன்றும் முன்னாள் புலி உறுப்பினர் காண்பிக்கிறார். யுத்தத்தின் வடுக்கள் எப்போதும் எஞ்சியிருக்கும் என்கின்ற உண்மையும் வலியுறுத்தப்படுகிறது.

"இது போன்ற உள்நாட்டில் தயாரிக்கப்படும் திரைப்படம் ஒன்றை காண்பிப்பதற்கு தமிழ் திரையரங்கு உரிமையாளர்கள் முன்வருவதில்லை. ஏனெனில் இவ்வாறான திரைப்படங்கள் வர்த்தக ரீதியான நன்மையைக் கொடுக்காது என்பதால், இங்கே இந்திய தமிழ் திரைப்படங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன. எவ்வாறிருந்தாலும், இது போன்ற திரைப்படங்களைத் தயாரிக்குமாறு தமிழ் குறுந்திரைப்பட தயாரிப்பாளர்களை நான் உற்சாகப்படுத்துகிறேன். இலங்கை தற்போது இயல்பு வாழ்வுக்கு திரும்புகிறது. அபிவிருத்திகள் இடம்பெறுகின்றன. சமூகங்களின் மத்தியில் புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது" என இயக்குனர் அசோக ஹந்தகம தெரிவித்துள்ளார்.

அசோக ஹந்தகமவால் எழுதி இயக்கப்பட்ட இத்திரைப்படத்தில் தர்சன் தர்மராஜ், சுபாசினி பாலசுப்பிரமணியம், நிரஞ்சனி சண்முகராஜா, ராஜா கணேசன், கிங் ரட்ணம், மல்கம் மக்கடோ, திரு திருமதி தைரியநாதன், ஜி.பி.பெர்மினஸ், மகேஸ்வரி ரட்ணம் ஆகியோர் நடித்துள்ளனர். ஒளிப்பட இயக்குனர் சன்ன தேசப்பிரிய, கலை இயக்குனர் சுனில் விஜேரட்ண.

# யோகக் கலை பற்றி...

- மனித வாழ்க்கையை நெறிமுறைப்படுத்தி வாழ்க்கையில் பயனும் பற்றும் ஏற்படுத்த உதவுவது யோகக் கலை.
- 84 இலட்சம் ஜீவராசிகள் இவ்வையகத்தில் இருப்பதாகவும் ஒவ்வொரு உயிருக்கும் ஓர் ஆசனமாக 84 இலட்சம் ஆசனங்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.
- நம்முடைய உடல் யோகப்பயிற்சியினால் இளமை, அழகு, ஆரோக்கியம் பெறும். நோய் வராது தடுக்கும் சக்தி உடலுக்கு ஏற்படும்.
- வளையக்கூடிய தன்மையையுடைய முதுகெலும்பும் உடலுமே உண்மையான அழகான ஆரோக்கியமான ஒன்றாகும். எவ்வளவுக்கெவ்வளவு முதுகெலும்பு வளைகிறதோ அந்த அளவு மனிதர்கள் இளமையோடு இருக்கிறார்கள் என்று அர்த்தம். உடல், மூளை, மனம் இம்மூன்றையும் ஒருங்கிணைப்பது யோகமாகும்.
- ஹடயோகம் 84 இலட்சம் ஆசனங்கள் பற்றியும் தேகத்தின் அனைத்துப் பாகங்களையும் சுத்தம் செய்து அசுத்தம் வெளியேறச் செய்யும் 104 நுட்ப முறைகள் பற்றியும் கூறுகிறது. அந்தராத்ம அறிவையும், அந்தராத்ம ஞானம் பற்றியும் ஞானயோகம் கூறுகிறது.
- திருமூலர் திருமந்திரத்தில் பிராணயாமத்தின் பெருமையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார். பிராணயாமம் செய்தால் உடல் வலுப்பெற்று பலகாலம் இளமையுடன் வாழும் நிலையை ஒருவன் அடைவான்.
- பேயாட்டம் போடும் மனதை அடக்கிக் கட்டிப் போட பிராணயாமத்தால் முடியும். மனதை அடக்கக் கற்றுக்கொண்டு விட்டால் சகல துயரங்களுக்கும் விடை காணமுடியும். அலையும் மனதைப் பேயாக உருவகப்படுத்திப் பாடியிருக்கும் சித்தர்தான் சுகப்பேய் சித்தர்!



('சித்தர் மரபுக் கதைகள்' என்ற நூலில் ஜெகாதா)

முதல் கிறிஸ்துமஸ் கார்ட்!




# முதல் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை

1843ஆம் ஆண்டில்தான் முதன்முதலாக இங்கிலாந்தில் "கிறிஸ்மஸ் கார்ட்" உருவாகியது. தம்முடைய நண்பரான சர்ஹென் கோல் என்பவருக்கு ஜே.ஸி.ஹார்ஸ்லி என்பவர் அதை தயார் செய்து கொடுத்தார். தடித்த அட்டை காகிதத்தில் லித்தோ முறையில் அச்சிட்ட கார்ட் அது. வாழ்த்து அனுப்பும் அட்டையின் முதல் அறிமுகம் இது.

தொம்ஸன் என்ற ஓவியர் தான் வரைந்த ஓவியத்துடன் கிறிஸ்மஸ் வாழ்த்தினை இங்கிலாந்து அரசருக்கு அனுப்பிவைத்தார். அதைக் கண்டு மகிழ்ந்த அரசர் அந்த ஓவியரைக் கொண்டு பல ஓவியங்களை வரையச் செய்து பலருக்கு அனுப்பிவைத்தார். "லூயிஸ் பிராங்" என்பவர்தான் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகளை முதலில் விற்பனைக்குக் கொண்டுவந்தார்.

# நத்தார் பண்டிகை!



- இன்றும் எத்தியோப்பியாவில் ஒவ்வொரு மாதமும் கிறிஸ்மஸ் கொண்டாடுகின்றனர். மார்ச் மாதத்தில் மட்டும் விருந்துக்கு பதிலாக உபவாசம் இருக்கின்றனர்.
- ஸ்காண்டிநேவியாவில் கிறிஸ்மஸ் விழாவை பறவைகளுக்கு விருந்தளிப்பதன் மூலம் கொண்டாடுகின்றனர். கோதுமைக் கதிர்களை தூண் போலக் கட்டி வயல்வெளியில் வைத்து விடுகின்றனர். இதன் கீழேயும் தானியங்களை பரப்பி வைத்திருப்பர்.
- அவுஸ்ரேலியாவில் கிறிஸ்மஸ் விழா பழக்கம் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். மற்ற நாடுகளில் எல்லாம் இந்த நேரத்தில் பனி மூடிக் கிடக்கும். ஆனால், அவுஸ்ரேலியாவிலோ இது அவர்களுக்கு, கோடை காலத்தின் இடைப்பகுதி. ஆகவே, கிறிஸ்மஸ் நாளை, சுற்றுலா சென்றும் கடற்கரைகளிலும் மகிழ்ச்சியாக செலவழிக்கின்றனர்.
- அயர்லாந்து நாட்டினர் கிறிஸ்மஸ் தினத்திற்கு முந்தின இரவு ஜன்னல் ஓரங்களில் விளக்குகளை எரியவிடுவர். யோசேப்பும், மரியாளும் குழந்தை பிறக்கும் நேரத்தில் இடமில்லாமல் தவித்தது போல், இன்று எவரும் தவிக்காமல் எங்கள் வீட்டிற்கு வாருங்கள் என்று அழைக்கும் விளக்குகளாம் அவை.
- கிறிஸ்மஸ் நாளன்று பசுக்களுக்கு ராஜ மரியாதை செலுத்துகின்றனர் இத்தாலிய மக்கள்.

அன்று பசுக்களைக் குளிப்பாட்டி, அவைகளுக்கு விசேஷ மரியாதை செலுத்துவர். இயேசுநாதர் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த போது, அருகிலிருந்த ஒரு பசு, மாட்டுத் தொழுவத்தில் நிலவிய கடுங்குளிரிலிருந்து இயேசு நாதரைக் காப்பாற்றுவதற்காக அவரை அவ்வப்போது நெருங்கி பெருமூச்சு விட்டு அவருக்கும் வெப்பம் கொடுத்ததாம். அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே இத்தாலியர் கிறிஸ்மஸ் அன்று பசுக்களுக்கு மரியாதை செய்கின்றனராம்.

- ஒல்லாந்து தேசத்து குழந்தைகளுக்கு டிசம்பர் மாதத்தின் ஆரம்பத்திலேயே கிறிஸ்மஸ் பரிசுகளைக் கொண்டு வந்து கொடுத்து விடுவார் செண் நிக்கோலஸ். குதிரைகளின் மீது அமர்ந்தபடி வேலைக்காரன் பீற்றர் பின் தொடர, பரிசு மூட்டையோடு வருவார் நிக்கோலஸ்.
- பல நாடுகளில் டிசம்பர் மாதம் 25ஆம் திகதியை கிறிஸ்மஸ் தினம் என்று அழைக்கிறோம். பிரான்ஸ் நாட்டினர் அதே நாளை "நோயல்" எனவும், ஜேர்மானியர் "வெய்நேக்ஷன்" எனவும், ஸ்பெயின் நாட்டினர், "நேவிடட்" எனவும், ஸ்கொட்லாந்து நாட்டினர், "யூல்" எனவும், இத்தாலியர், "நாடோல்லே" எனவும் அழைக்கின்றனர்.

# காதலிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்!

- ஞாநி கட்டுரையிலிருந்து.

எந்தப் புரிதலும் இல்லாமல், கண்டதும் காதல் என்று வெறும் பாலியல் கவர்ச்சியைக் காதல் என்று இன்று பல யுவன்களும் யுவதிகளும் குழப்பிக் கொள்கிறார்கள் என்பது உண்மைதான். காதல் பற்றிய அந்த விடலைத்தனத்துக்கு உரம் போட்டு நீர் ஊற்றி வளர்ப்பது யாரென்று அடையாளம் காணவேண்டும். அது சினிமாதான். "அறியாத வயசு. புரியாத மனசு. ரெண்டும் சேர்ந்து காதல் செய்யும் நேரம்" என்று "காதலை" கிண்டர்கார்டனுக்கே கொண்டு போனது தமிழ் சினிமாதான். அது காட்டி வருவது காதலே அல்ல. காமப் பசியைத் தான் காதல் என்று சித்திரித்துக் கொண்டிருக்கிறது. விடலை மனங்களுக்கு சினிமா கற்றுக் கொடுத்திருக்கும் ஈவ் டீசிங் கொஞ்சநஞ்சமல்ல. பள்ளிக் கூடத்துக்கு படிக்கப் போகும் மாணவியின் சைக்கிளை மடக்கிப் பிடித்து வைத்துக். கொண்டு என்னை லவ் பண்ணினாதான் விடுவேன் என்று மிரட்டும் பொறுக்கியை தமிழ் சினிமா ஹீரோவாகக் காட்டுகிறது. சினிமாவில் அந்தப் பெண் ஏழெட்டு முறை மிரட்டலுக்குப் பின் அந்தக் "காதலை" ஏற்றுக் கொண்டு விடுவாள். வாழ்க்கையில் என்ன நடக்கும்? ஒரே சாதிக்காரராயிருந்தால், முதல்முறை டீசிங்குக்குப் பிறகு அந்தப் பெண்ணை ஸ்கூலுக்குப் போகாதே என்று நிறுத்திவிடுவார்கள். எதிரெதிர் சாதியானால் இது சாதிக் கலவரமாக மாறிவிடும். அடுத்த சினிமாவில் குழந்தை உழைப்பை நிறுத்தி கல்வி தரவேண்டிய அவசியம் பற்றி உபதேசிக்கலாம்.

கடந்த பத்தாண்டுகளில் வந்திருக்கும் தமிழ்ப்படங்களில் பெரும்பாலானவை, மீடியாவால், பத்திரிகைகளால் கொண்டாடப்பட்டவை, விருதுகள் பெற்றவை பொறுக்கிகள், பொறுக்கித் தனம், பெண்ணை வலுக்கட்டாயமாகக் காதலிக்கவைத்தல் போன்ற அம்சங்களையே கதாநாயக அம்சங்களாக உயர்த்திப் பிடித்தவை. விதிவிலக்கான நல்ல படங்கள் மிகச் சில. பெண் உடலுக்கு ஆணும் ஆண் உடலுக்குப் பெண்ணும் ஆசைப்பட்டு ஏங்குவதும் அதை அடைய விதவிதமான வன்முறையில் ஈடுபடுவதையுமே காதல் என்று வணிகப் படங்கள் நம்மை நம்பவைத்து வருகின்றன. இவற்றின் ஒட்டு மொத்த விளைவு என்ன? காம உணர்ச்சியால் மட்டும் உந்தப்பட்ட இளைஞர்கள் தன்னை காதலிக்காத, தனக்குக் கிடைக்காத பெண்ணை அழித்துவிடும் வெறியுடன் ஆசிட் ஊற்றும் வரை போகிறது.

சிறு வயதிலிருந்தே ஆணும் பெண்ணும் சகஜமாகப் பழகி ஒருவரையொருவர் புரிந்துகொள்ள விடாமல் தடுக்கும் சமூகத்தில், எது காதல் என்ற குழப்பம் ஏற்படுவதே இயற்கை. தன் உடலில் ஏற்படும் மாற்றங்கள், மனதில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியெல்லாம் விடலை வயதில் அறிவுபூர்வமாக தெரிந்துகொள்ள வழியில்லாமல் வளரும் சிறு-வரும் சிறுமியும் காம ஈர்ப்பை காதல் என்று மயங்குவதுதான் நடக்கும். படிப்பு, சொந்தக் காலில் நிற்பதற்கான வேலைவாய்ப்பு, சம்பளம் இவற்றையெல்லாம் இருவரும் அடைந்தபின்னர்தான் நாம் சேர்ந்து நமக்கான குடும்பத்தை உருவாக்கமுடியும், ஒன்று சேர்ந்து வாழ்வதற்கான பரஸ்பர மதிப்பும் அன்பும் நம்மிடையே இருக்கிறதா என்ற அறிவு முதிர்ச்சி இல்லாமல் உருவாகும் எந்தக் காதலும் உடல்களைத் த்ாண்டி நீடிக்காது.

நம் சமூகப் பிணிகளில் ஒன்றான சாதியை ஒழிக்க காதல் திருமணங்கள் நிச்சயம் உதவும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை, ஆனால் சாதி கடந்த திருமணங்கள் எளிதானவை அல்ல. பாரதி தன் சந்திரிகை என்ற நாவலிலே, கோபால அய்யங்காருக்கும், வீரேசலிங்கம் பந்துலு வீட்டுப் பணிப் பெண்ணாகிய மீனாட்சிக்கும் பிரம்ம சமாஜத்தில் நடந்த கலப்பு மணத்தை வருணித்திருக்கிறார். அது பாரதியின் இலட்சியங்களில் ஒன்று. ஆனால் பாரதிக்கு அடுத்த தலைமுறையான புதுமைப்பித்தன் காலத்திலும் சாதி கடந்த கலப்பு மணம் எளிதாகிவிடவில்லை. பாரதியின் இலட்சியத்தை புதுமைப்பித்தன் பகடி செய்து ஒரு கதையே எழுதியிருக்கிறார். கதைக்கு ஒரு முன்குறிப்பு எழுதும் புதுமைப்பித்தன்,

"கதையின் போக்கு "கண்டதும் காதல்" என்ற கோபால அய்யங்காரின் இலட்சியத்துடன் - ஏன் பிரமை என்றும் கூறலாம் - முடிவடை-கிறது. முடிவு பெறாத இரண்டாவது பாகத்தில் வருணிப்பாரோ, என்னவோ? மனிதன், "காதல் பெண்ணின் கடைக்கண் பணியிலே" அனலை விழுங்கலாம், புளித்த குழம்பையும் குழைந்த சோற்றையும் உண்ணச் சம்மதிப்பானோ என்னவோ? பின் கதையை என் போக்கில் எழுதுகிறேன். பாரதியின் போக்கு இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்பதில்லை"

என்று ஆரம்பிக்கிறார். அவர் கதையில் மீனாட்சியால் கோபாலய்யங்காரின் சைவ உணவுமுறைக்கு மாற முடியாத கஷ்டம் சித்திரிக்கப்படுகிறது. புதுமைப்பித்தன் சொல்லும் தீர்வு தம்பதிகள் மது அருந்துவதும், கோபாலய்யங்கார் அசைவ உணவுக்கு மாறுவதும்தான்!.

சாதி, மதம் கடந்த கலப்புத் திருமணங்கள் வெற்றி பெற பல அம்சங்கள் முக்கியமானவை. உணவுப் பழக்கத்தில் அவரவர் விருப்பத்தை மற்றவர் மதிக்கும் அம்சம் அதில் ஒன்று. சாதி மதம் சார்ந்த குடும்பப் பழக்க வழக்கங்கள் அடுத்தவை. இருவருமே தங்கள் வாழ்க்கையின் இனிமைக்கு சாதியோ மதமோ பிரதானமானதல்ல - தேவையில்லை என்ற அறிவுடன் இருப்பது முக்கியம். இருபக்க உறவினர்களும் இழுக்கும் இழுப்புகளுக்கெல்லாம் ஆட்படாமல் சுயமாக சிந்திக்கவும் அதன்படி செயல்படுவதற்குமான ஆற்றல் தேவை. இதையெல்லாம் அவர்களுக்கு எது தரும்? சுயசார்பு இருக்க வேண்டும். அறிவு முதிர்ச்சி இருக்க வேண்டும். இருவருக்கும் ஒருவர் மீது மற்றவருக்கு அன்பும் மதிப்பும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட காதல் விடலை வயதில் எப்படி சாத்தியம்? அதுவும் காதல் என்றால் காமம் என்றே நம்பவைக்கும் சினிமா சூழலில்? ஒரு சிறுவனும் சிறுமியும் பேசினாலே கற்பு பறிபோய்விடும் என்று அஞ்சும் சமூக சூழலில்? தன் உடலைத் தானே புரிந்து வசப்படுத்த இயலாத வாழ்க்கை முறையில்? இந்தச் சூழலை மாற்றினால்தான் மெய்யான காதல் தழைக்க முடியும். மெய்யான காதலே சாதி மதங்களைக் கடக்கும் வல்லமையுடையது. அப்படிப்பட்ட காதலர்களை எந்த வயதில் பார்த்தாலும் நம் மனதிலும் காதல் ஊறும் என்பது என் அனுபவம்.






# வாழ்வாதாரத்திற்கு சுயதொழில் துறையூர் மக்களின் முன்மாதிரி

**வேலணையில்**

துறைய,ர் கிராமத்தில் சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அதில் அதிகமானவர்கள் கடற்றொழிலை தமது வாழ்வாதாரத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் சுயதொழில் முயற்சிகளாக மோர் மிளகாய், பாய் பின்னுதல், மீன் பதப்படுத்த ஐஸ் தொழிற்சாலை போன்ற வற்றை மேற்கொண்டு வருகின்றனர்.

இங்குள்ள மக்கள் அதிகமாக இந்து சமயத்தை சார்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். பிரதானமாக ஐயனார், முருகன் ஆலயங்கள் காணப்படுகின்றன. மாணவர்கள் ஆரம்பக் கல்வியை பயில்வதற்கு வேலணை தெற்கு ஐயனார் வித்தியாசாலை காணப்படுகின்றது.இதில் 08 ஆசிரியர்களும் 198 மாணவர்களும் உள்ளனர்.

இக்கிராமத்தின் பிரதான விளையாட்டாக உதைபந்தாட்டம் காணப்படுகின்றது. தீவகத்திலே முன்னணியில் காணப்படும் ஐயனார் விளையாட்டுக்கழகம் இக் கிராமத்திற்கு பெருமை சேர்க்கிறது. கிராம மக்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிப்பதற்காக ஐயனார் சனசமூக நிலையம் காணப் படுகின்றது. இதனுடன் இணைந்து நூலகமும் காணப்படுகின்றது. கிராமத்தில் உள்ள அங்கத்தவர்களின் அனுசரணையுடன் பத்திரிகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாதர் சங்கம் ஊடாக தையல், அழகுக்கலை பயிற்சி, கயிறு பின்னுதல் போன்ற பல தொழில் முயற்சிகள் காணப்படுகின்றன.

இக்கிராமத்தில் அபிவிருத்தித் திட்டங்களாக கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், சுற்றுமதில் ஓய்வு மண்டபம், நண்டு பதப்படுத்தும் நிலையம், வீதி அபிவிருத்தி, மீன் சந்தை போன்றன அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.


தாளையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்


ஐயனார் வித்தியாசாலை


ஐயனார் விளையாட்டு மைதானம்


புதிதாக அமைக்கப்படும் ஐயனார் கோவில் தேர்முட்டி


மாதர் சங்க மண்டபம்


கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்


புதிதாக நிர்மாணிக்கப்படும் மீன் சந்தை

# சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை வழங்கப்படவில்லை

## சமாசம் சுட்டிக்காட்டு

(கரணவாய்)

உள்ளூராட்சி திணைக்களத்தால் சனசமூக நிலையங்களுக்கு அரசமானியமாக வழங்கப்படும் நன்கொடை தற்போது வழங்கப்படாமையால் சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள் முடங்கிக் காணப்படுவதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் சனசமூக நிலையங்களின் சமாசம் கவலை தெரிவித்துள்ளது.

முன்னர் சனசமூக நிலையங்களுக்கு ஆரம்பத்தில் 500 ரூபாவில் இருந்து 2010ஆம் ஆண்டு வரை 5000 ரூபாவாக உயர்த்தப்பட்டு நன்கொடையாக வழங்கப்பட்டது.

இதனால் மிகவும் வறுமையில் வாழும் மக்கள் ஓரளவிற்கேனும் பத்திரிகை வாசித்தலை மேற்கொண்டனர். இதனால் மக்கள் பல்வேறு தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது.

எனினும் 2011 ஆம் ஆண்டிலிருந்து சனசமூக நிலையங்களுக்குரிய நன்கொடை வழங்கப்படவில்லை.இது தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களமோ. பிரதேச சபைகளோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கின்றனர். இதனால் இப்பிரதேச சபையின் கீழ் உள்ள பல சனசமூக நிலையங்கள் செயற்பட முடியாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் சனசமூக நிலையங்களுக்கு அறிவித்தல்கள் வழங்க வேண்டும் எனவும் அதன்மூலம் சனசமூக நிலையங்கள் செயற்பட முடியும் என சமாசத்தினர் தெரிவிக்கின்றனர். (18)

# சைவ ஆலோசனைசபையின் சிவநெறி இறுவட்டு வெளியீடு

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சைவ ஆலோசனை சபையின் ஏற்பாட்டில் சிவநெறி இறுவட்டு வெளியீட்டு விழா இன்றுவெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலரும் கரவெட்டி சைவ ஆலோசனை சபைத் தலைவருமான சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண ஒய்வு நிலை பிரதம செயலாளர் ஆர். சிவசுவாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன், மதிப்பீட்டுரையை கோப்பாய் சிவம் பிரம்மஸ்ரீ சிவாநந்த சர்மா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இதில் நூலின் முதற்பிரதியை நெல்லியடி மருதம் உரிமையாளர் ஏ.சிவநாதன் பெறவுள்ளார்.

இவ் இறுவட்டில் மாலைசந்தை ஸ்ரீ வரதராஜா விநாயகர் ஆலயம், அருள்மிகு உச்சில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், நெல்லியடி தடங்கன் புளியடி முருக மூர்த்தி ஆலயம் வதிரி, பூவக்கரை பிள்ளையார் ஆலயம், துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயம் அருள்மிகு தில்லையம்பலம் பிள்ளையார் ஆலயம் அருள்மிகு அத்துளு கண்ணகி அம்மன் ஆலயம் சமரபாகு எள்ளங்குளம் ஸ்ரீ அருள்மிகு ஆதிபராசக்தி ஆலயம் ஆகிய ஆலயங்களின் சிறப்புக்கள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (116)



ஊர்காவற்றுறை தீவக வடக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது பிரதேச சபை தவிசாளரும் ஈ.பி.டி.பி. கட்சியின் ஊர்காற்றுறை பிரதேச சபை அமைப்பாளருமான ம. ஜெயகாந்தன் மங்கள விளக்கேற்றுவதைக் காணலாம்.

# கட்டாக்காலி மாடுகளால் நெற்பயிர்கள் நாசம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் நெல்வயல்களில் கட்டாக்காலி மாடுகள் இரவு வேளைகளில் புகுந்து நெற்பயிர்களை நாசம் செய்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வருடம் மண்டைதீவுக் கிராமத்தில் எதிர்பார்க்கப்பட்ட அளவு விளை நிலத்தில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாது விட்டாலும் விதைப்பிற்குள்ளாகிய வயல் நிலங்களில் பெருமளவு நெற்பயிர்கள் நல்ல நிலையிலேயே காணப்பட்டது.

இருந்தும் அந்தப் பகுதிகளில் காணப்படும் கட்டாக்காலி மாடுகள் இரவு வேளைகளில் வயல் நிலங்களில் புகுந்து நெற் பயிர்களை நாசம் செய்து வருவதாக அந்தக்கிராம விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்த வயல் நிலங்களைச்சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டிருந்தபோதும் அவற்றையும் சேதப்படுத்தியே இந்தக் கட்டாக்காலி மாடுகள் உட்புகுந்து சேதம் விளைவிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இம்முறை நெற்பயிர்களுக்கு போதிய அளவு மழை வீழ்ச்சியும் கிடைத்திருக்கின்ற போதும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை இந்தப்பகுதி விவசாயிகளை கவலையடைய வைத்துள்ளது. (பா)

# திறப்பு விழா

(குருநகர்)

கார்மேல் மாதா சனசமூக நிலைய நூல்கள் இரவல் வழங்கும் பணிமனை திறப்பு விழா நாளை சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு குருநகர் மவுண் கார்மேல் வீதியில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் பேதுறுப்பிள்ளை பிரான்சிஸ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு மாதகல், புனித தோமையார் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி ஜி.எவ். கனிசியஸ்ராஜ் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து சிறப்பிக்க உளளார். (68)



கிறிஸ்மஸ் நிகழ்வை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை ஆனைக்கோட்டை பங்குமக்களால் அடைக்கலநாயகி கலையரங்கில் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வில் மறையாசிரியர்கள், பங்குத்தந்தை மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் இறைவணக்கம் செலுத்துவதையும், சிறார்களின் கலை நிகழ்வையும் காணலாம்.

# பதிவிருக்கப் பெட்டகம்

ஒரு கூட்டத்தின் பாதுகாப்புக்கு அது அவசியமானால் ஒரு பொய்யை சொல்லித்தான் கடவுள் என்ற பிரமையை சிருஷ்டித்தால் என்ன? இந்தக் கடவுள் விஷயம் ரொம்ப சுவாரஷ்யமானது. அது தனிமனிதனுக்கு ஒரு தைரியத்தைக் கொடுக்கிறது – சமூகத்திற்கு ஒரு சக்தியைக் கொடுப்பது போல. நாஸ்திகம் தர்க்கத்தில் நிஜமாக இருக்கலாம். அது சுவாரஷ்யமற்றது. வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்த முடியாதது. அது தனிமனிதனுக்கு சாந்தியை அளிக்கலாம். ஆனால் ரசனையற்றது, சுவையற்றது. தெயவத்தைப் படைப்பது கவிஞன். தெய்வத்தை அறிபவன் விஞ்ஞானி. தெய்வம் என்றால் என்ன? இலட்சியம்! அது எந்த வடிவத்தை எடுத்தால் என்ன? மனித வர்க்கத்தை ஒரு படி உயரச் செய்தால், அது தெய்வத்தின் சக்தி படைத்தது. அதுதான் தெய்வம் என்று ஏன் சொல்லக் கூடாது?

**– புதுமைப்பித்தன்**

பெருமழையின் பின் பாய்கிற வெள்ளம் பள்ளத்தின் திசையில் ஓடிக்கொண்டிருக்கும். அதைத் தடுத்து நிறுத்தி மேட்டுக்கேற்றுதல் என்பது கல்லிலே கயிறு திரித்தலுக்கு ஒப்பானது. வேண்டுமாயின் வேறொரு பள்ளத்தில் திருப்பி விடலாம். ஈழப்போரும் அப்படித்தான். ஈழத்தமிழரின் எல்லாப் பாண்பாட்டு விழுமியங்களையும் வேறெரு பள்ளத்தில் திருப்பிவிட்டது.. இப்போ விழாக்கள் அனைத்தும் ஒரு நிமிட மௌனஅஞ்சலியுடன் தொடங்குவதே புதுவழக்கு. யாருக்கு அஞ்சலி என்பது நடத்துவோரைப் பொறுத்தது. அது விழாவுக்கு விழா வேறுபடும். **– திருமாவளவன்**

கொதிக்கும் நீரில் தவளையை போட்டால், உடனே துள்ளி வெளியே விழும். தோல் போனாலும் உயிர் பிழைத்திருக்கும். அதே தவளையை குளிர்நீரில் போட்டு கொஞ்சம் கொஞ்சமாக சூடு ஏற்றினால் அதற்கேற்ப தவளை தன்னை அனுசரித்துக் கொள்ளும். ஆனால் கடைசியில் உயிர் இருக்காது. **– டேனியல் குய்ன்**

பாகேஸ்ரீ ராகம் பின்னிரவின் ராகம். நள்ளிரவு தாண்டி படித்துக்கொண்டிருக்கும் போதோ அல்லது எழுதிக்கொண்டிருக்கும் போதோ பாகேஸ்ரீ ராகத்தில் அமைந்த இசைக் கோவைகளைக் கேட்கும்போது அன்பிற்கு அல்லது காதலுக்கான ஏக்கம், அந்த ஏக்கம் விளைவிக்கின்ற காத்திருத்தலில் பண்பட்டு அடைகின்ற மன எழுச்சி ஆகிய மன நிலைகளை வேறெந்த ராகமும் தருவதில்லை என்று தோன்றும். அன்பின் கசிவில் இளகிய இதயத்திற்கும், கரங்களின் தழுவலுக்கும் ஏங்க வைத்துவிடும்.

**– எம்.டி.முத்துக்குமாரசாமி**

துருக்கியில் ஒரான் பாமுக்கின் நாவல் ஒரு லட்சம் பிரதி விற்பனை ஆகிறது. அவர் நோபல் பரிசு பெறுவதற்கு முன்பே இந்த நிலை. சீனர்கள் கன்னாபின்னா என்று படிக்கிறார்கள். நாவல்கள் அங்கே கோடிகளில் விற்பனை ஆகிறது. தமிழர்கள் புத்தகம் என்பதை 'ராம் [பாவம்] என்று கருதுகிறார்கள். அதனால்தான் அவர்கள் புத்தகம் வாங்குவதை வெறுக்கிறார்கள். புத்தகம் எழுதுபவர்களை வெறுக்கிறார்கள். புத்தகம் படிப்பவர்களை வெறுக்கிறார்கள். வீட்டில் நம் குழந்தைகள் பாடப் புத்தகத்தைத் தவிர வேறு புத்தகங்களைத் தொட்டு விட முடியுமா என்ன?

சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். என்னுடைய சிறுகதைத் தொகுதி ஆங்கிலத்தில் (Morgue Keeper) வெளியாகி இருக்கிறது. 170 ரூபாய்தான் விலை. என் தோழி ஒருவர் பேராசிரியராக இருக்கிறார். அவர் தனது சகாவிடம் இந்தப் புத்தகத்தை வாங்கும்படி சொல்லியிருக்கிறார். சகா புத்தகம் படிக்கும் பழக்கம் உள்ளவர் என்பதால்தான் சொன்னது. இல்லையெனில் சொல்லியிருக்க மாட்டார். சகா பதிலுக்கு "உன்னிடமினக காப்பி இருந்தால எனக்கு அனுப்பி வை" என்றாராம். அடிக்கடி மதிய உணவுக்கு இவர்கள் உணவு விடுதிகளுக்குச் செல்வார்கள். ஆயிரக் கணக்கில் செலவாகும். தின்று விட்டு மலமாகப் போகும் விஷயங்களுக்கு ஆயிரக் கணக்கில் செலவழிக்கலாம். ஆனால் ஞானமும் அறிவும் எங்களுக்கு ஓசியிலேயே கிடைக்க வேண்டும் என்று கருதும் சமூகம் இது.

**– சாரு நிவேதிதா**

# வடக்கில் கைதுகள் தொடரும் பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு



(கொழும்பு)

வடக்கே கைது செய்யப்பட வேண்டிய நபர்கள் இன்னும் உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரஷாந்த ஜயக் கொடி தெரிவித்துள்ளார். யாழ்ப பாணத்தில் கடந்த பல வாரங்களில் 45 பேர் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பூசா முகாமில் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் எனவும நீண்ட காலமாக சேகரித்துவந்த புல னாய்வுத் தகவல்களின்படியே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்திடம் சரணடையாமல் மறைந்துவாழ்ந்த இவர்கள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அதன்பின்னர் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

புலனாய்வுப் பிரிவினரின் தகவல்களின் படி இன்னும் கைது செய்யப்பட வேண்டியவர்கள் வடபகுதியில் உள்ளனர். கைது செய்யப்பட்டோரில் ஒருவர் மாணவர், மூவர் பெண்கள் ஆவர்.

இதேவேளை, இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ள 45 பேர் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தமது ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி டி.கனகராஜ் கூறினார்.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் மூன்று பெண்களும் 19 வயதான பள்ளி மாணவர் ஒருவரும் அடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் போருக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்தவர்கள் என்றும் போர் முடிந்த பின்னர் முகாம்களில் இருந்து யாழ்ப்பாணத்தில் 2010ஆம் ஆண்டளவில் மீளக் குடியேறியவர்கள் என்றும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகம் தெரிவித்தது.

# அல்லைப்பிட்டி மக்களின் பங்களிப்புடன் புனரமைக்கப்படுகிறது பாடசாலை



(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் அமைந்துள்ள நூற்றாண்டு பழைமையான, றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தினை அதன் நிரந்தரமான பழைய இடத்தில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

இதுவரை அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் அதிபர் என். பத்மநாதன் தலைமையில் தற்காலிகமாக இயங்கி வந்த நிலையில் வரும் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் பழைய இடத்தில் ஆரம்பிக்க முடிவெடுக்கப்பட்டு புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. புனரமைப்பு பணிகளுக்குத் தேவையான நிதியின் ஒரு பகுதியினை அரசசார்பற்ற உதவி வழங்கும் நிறுவனம் வழங்கியிருந்தது, மேலதிக நிதியினை உள்ளூர் மற்றும் புலம் பெயர் அல்லைப்பிட்டி மக்கள் வழங்கி வருவதாக மேலும் தெரிவிக்கப் படுகின்றது.

அத்தோடு பொதுமக்களும் சிரமதானம் மூலம் புனரமைப்பு பணிகளுக்கு உதவி வருவதாகவும் அல்லைப்பிட்டி கடற்றொழிலாளர் சங்கம் கல்லால் வெட்டப்பட்ட தூண்களை வழங்கியுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இப் பாடசாலையை, 2013ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பித்து சிறப்பாக நடத்தவேண்டும் என்ற உறுதியோடு லீவுநாட்களில் கூட புனரமைப்பு பணிகளை முன்னின்று பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கி வருகின்றார் இதன் அதிபர் என். பத்மநாதன்.

# பொதுக்கூட்டம்

(காரைநகர்)

காரைநகர் அபிவிருத்திச்சபையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் காலை 9.00மணிக்கு நடைபெறவுள்ளது. க.சோமசேகரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் எதிர்வரும் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபைத் தெரிவு செய்யப்படவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் வருகைதந்து சிறப்பிக்குமாறு காரைநகர் அபிவிருத்திச்சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# பிள்ளைகள் வழிதவற பெற்றோரும் காரணம்

## தெருவெளி ஆற்றுகை



(மறவன்புலோ)

இன்றைய பிள்ளைகள் வழி தவற பெற்றோரும் காரணம் எனும் தொனிப் பொருளில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக தயாரிப்பில் வீதி நாடகம். மறவன்புலோ மத்தி பாரதி சனசமூக முன்றல் வீதியில் கடந்த 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணியளவில் இடம்பெற்றது.

இன்றைய இளைஞர்கள் யுவதிகள் வழி தவறிச் செல்வதற்கு பெற்றோரும் முக்கிய காரணம் எனும் தலைப்பில் கைதடி முத்துக் குமாரசாமி வித்தியாலயம் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் கைதடி இரட்சணியசேவையைச் சேர்ந்த மாணவ மாணவிகளின் நடிப்பில் வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் பிரிவு இவ் வீதி நாடகத்தை தயாரித்து வழங்கியது.

இடம்பெற்ற இந் நிகழ்வில் வலயக் கல்வி அலுவலகம் தென்மராட்சி வழி காட்டலும் ஆலோசனை வழங்கலும் பிரிவின் அலுவலர்கள், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை அதிகாரிகள், மறவன்புலோ கிராம அலுவலர், சகலகலாவல்லி வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மறவன்புலோ கிராம அலுவலர் தி.மகாலிங்கம், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை அதிகாரி எம்.மகிம்சன், வலய கல்வி அலுவலக அதிகாரி ஆகியோர் கருத்துக்களையும் வழங்கினர். இன்றைய இளைஞர்கள் யுவதிகள் வழி தவறிச் செல்வதற்கு பெற்றோரும் முக்கிய காரணம் எனவும் பெற்றோர் பிள்ளைகளை நன்கு கவனித்து அவர்களுக்கு எது தேவையானது தேவையற்றதென புரிந்து செயற்பட வேண்டும் என இங்கு சுட்டிக்காட்டப் பட்டது.

# சுனாமி வீடுகளை வழங்கக்கோரி அம்பாறையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(அம்பாறை)

2004ஆம் ஆண்டு சுனாமியின் போது இருப்பிடங்களை இழந்த தங்களுக்காக நுரைச்சோலையில் அமைக்கப்பட்ட வீடுகளை வழங்கக்கோரி அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பிரதேச முஸ்லிம்கள் நேற்றுமுன்தினம் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பிரதேச முஸ்லிம்களுக்கென சவுதிஅரேபிய அரசாங்கத்தினால் நுரைச்சோலை என்னுமிடத்தில் 500 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.

தங்களுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளை தமக்கு வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தைக் கண்டித்தும் வீடுகளை தமக்கு வழங்கக் கோரியும் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.



மக்கள் கல்முனை அக்கரைப்பற்று பிரதான நெடுஞ் சாலையின் குறுக்கே அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக சில மணிநேரம் அவ்வழியான போக்குவரத்திலும் தடை ஏற்பட்டது.

பிரதேச செயலரும் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரும் சம்பவ இடத்திற்குவந்து ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வழங்கிய உறுதிமொழியின் பேரில் பிற்பகலுடன் ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வந்தது.

21 நாள் கால அவகாசத்திற்குள் தீர்வு பெற்றுத்தருவதாக பொலிஸ் அத்தியட்சகரினால் தங்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டதாகவும் அதனையடுத்தே ஆர்ப்பாட்டத்தை தாம் கைவிட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

நீதிமன்ற தீர்ப்பு காரணமாக எழுந்துள்ள சட்டப் பிரச்சினையே பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு வீடுகள் வழங்குதலில் ஏற்பட்டுள்ள தாமதங்களுக்கு காரணம் என்று பிரதேச செயலர் ஏ.எல்.எம். சலீம் கூறினார்.

இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியை அரசாங்க அதிபர் நாடியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



சுனாமி நினைவு நாளை முன்னிட்டு நண்பர்களாக ஆசிரியர்களும், வைத்தியத்துறையைச் சார்ந்தவர்களும் சேர்ந்து இரத்ததான நிகழ்வொன்றினை நடாத்தியுள்ளனர். இந்நிகழ்வானது பிரதானமாக யாழ்.போதனா வைத்தியசாலையிலும் சமவேளையில் கிளிநொச்சி மற்றும் மட்டக் களப்பிலும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. இதில் யாழ். போதனாவைத்தியசாலையில் இரத்த தானம் செய் தவர்களைக் காணலாம்.

பின்வரும் வினாக்களுக்குத் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றி விடை எழுதுக.

38. சின்னச் சின்னக் குருவி
அழகான குருவி
சிறகடித்துத் திரியும்
சின்னஞ் சிறிய குருவி

இப்பாடல் பறவை பற்றியதெனின் "திரியும்" என்ற சொல்லின் கீழ்க் கீறிடுக. அவ்வாறின்றி அழகு பற்றிக் கூறப்பட்டுள்ளது என்றால் "சிறகடித்தது" என்ற சொல்லின் கீழ்க் கீறிடுக.

39. காலை எழுந்தேன்
கடவுளை வணங்கினேன்
பாடசாலை சென்றேன்
பாடங்கள் படித்தேன்.

இப்பாடல் பாடசாலை பற்றியதெனின் "பாடங்கள்" என்ற சொல்லின் கீழ்க் கீறிடுக. அவ்வாறின்றி நாளாந்தக் கடமைகள் பற்றி மட்டும் கூறப்பட்டுள்ளதென்றால் "காலை" என்ற சொல்லின் கீழ்க் கீறிடுக.

**பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

40. வைத்தியசாலை என்பது
1. மருந்து வகைகள் விற்கும் ஓரிடம் 2. பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் ஓரிடம்
3. நோயாளிகளைப் பரிசோதித்து மருந்து கொடுக்கும் இடம்

41. பாடசாலை என்பது
1. பரீட்சை நடைபெறும் ஓரிடம் 2. விளையாடும் ஓரிடம்
3. அறிவைப் பெற்றுக்கொடுக்கும் ஓரிடம்

42. கோபாலனிடம் ஒரு தொகைப் பழங்கள் இருந்தன. அவற்றை ஒருவனுக்கு 3 வீதம் பங்கிட்டுக் கொடுத்தால் 6 பேருக்குக் கொடுக்கலாம். ஒருவருக்கு 6 வீதம் கொடுத்தால் எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்?
1. 18 பேருக்கு 2. 6 பேருக்கு 3. 3 பேருக்கு

43. புகையிரதம் ஒன்றில் 705 பேர் பிரயாணம் செய்தனர். ஒரு புகையிரத நிலையத்தில் 120 பேர் இறங்க 167 பேர் ஏறினர். இன்னொரு புகையிரத நிலையத்தில் 60 பேர் இறங்க 45 பேர் ஏறினர். இப்போது புகையிரதத்தில் பிரயாணம் செய்யும் பயனாளிகளின் எண்ணிக்கை யாது?
1. 737 பேர் 2. 752 பேர் 3. 687 பேர்

44. பேனை ஒன்றில் முக்கியமாக இருக்க வேண்டியது.
1. அழகு 2. மூடி 3. மை

45. புத்தகம் ஒன்றில் இருக்கக் கூடியவை
1. கதைகள் 2. தாள்கள் 3. எழுத்துக்கள்

**கீழுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க.**

46. கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை என்று ஏமாறக் கூடாது.
1. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை 2. மின்னுவதெல்லாம் பொன்னல்ல
3. கழுதை அறியுமா கற்பூர வாசனை

47. கிடைப்பதற்கு அரிதான ஒன்றை மறப்பது நல்லது
1. பேராசை பெருந்தரித்திரம் 2. கிட்டாதாயின் வெட்டென மற
3. சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது

**பின்வரும் சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் வரிசையின் கீழ்க் கீறிடுக.**

48. 1. வற்றாளை, கற்றாளை, மரவெள்ளி, உருளைக் கிழங்கு
2. ஓடம், படகு, கப்பல், பாய்மரம்
3. சோறு, புரதம், இடியப்பம், பழங்கள்

49. 1. பாடசாலை, அதிபர், மாணவர், தளபாடம்
2. சந்தை, வியாபாரிகள், மக்கள், பொருட்கள்
3. தங்கம், வெள்ளி, தோடு, செருப்பு

50. தமிழர், சிங்களவர் ஆகியோரின் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பொருள் எது?
1) வெள்ளரசு 2) பத்தாண்டு 3) வெற்றிலை 4) சுதந்திரதினம்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I, II
விடைகள்

# கல்வி முரசு

வெளியீடு 23



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

மிகவும் சரியான விடையின் கீழ் கோடிடுங்கள்

1. இலங்கையை அதிக காலம் ஆட்சி செய்த அன்னியர் யார்?
1) போத்துக்கீசர் 2) ஒல்லாந்தர் 3) ஆங்கிலேயர் 4) அராபியர்

2. இலங்கையில் வாழும் ஆதிவாசிகளின் ஒரு குழுவான வேடுவர் அதிகளவு வாழும் இடம் எது?
1) மகியங்கனை 2) காலி 3) மாத்தறை 4) உகண

3. இலங்கையின் அரச இலட்சினையில் காணப்படும் மூன்று பகுதிகள்
1) நிறைகலசம், நெற்கதிர், தர்மசக்கரம் 2) நிறைகலசம், நெற்கதிர், அரச இலைகள்
3) சூரியசந்திரர், தர்மசக்கரம், அரச இலைகள் 4) சூரியசந்திரர், நெற்கதிர், சங்கு

4. இலங்கையின் தேசிய கொடியில் காணப்படாத அம்சம் பின்வருவனவற்றுள் எது?
1) அரச இலைகள் 2) செம்மஞ்சள், நிறக்கீலம்
3) தர்மசக்கரம் 4) பச்சை நிறக்கீலம்

5. இலங்கை அமைந்திருப்பது இந்தியாவுக்கு எந்த திசையில் ஆகும்?
1) வடக்கே 2) தெற்கே 3) மேற்கே 4) கிழக்கே

6) இந்தியா அமைந்திருப்பது இலங்கைக்கு எந்த திசையில் ஆகும்?
1) வடக்கே 2) தெற்கே 3) மேற்கே 4) கிழக்கே

7. இலங்கைக்கு அண்மையில் அமைந்துள்ள நாடு பின்வருவனவற்றுள் எது?
1) மாலைதீவு 2) பூட்டான் 3) இந்தியா 4) பாகிஸ்தான்

8. இலங்கையின் தேசிய அடையாளம் அல்லாதது எது?
1) நீலோற்பலம் 2) நிறைகலசம் 3) நாகமரம் 4) காட்டுக்கோழி

9. இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற ஆண்டு எது?
1) 1945 2) 1947 3) 1948 4) 1972

10. இலங்கையானது எந்த வெளிநாட்டவரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது?
1) போத்துக்கீசர் 2) ஒல்லாந்தர் 3) மலாயர் 4) ஆங்கிலேயர்

11. இலங்கையின் தேசியக் கொடியைச் சுற்றிவர நான்கு பக்கங்களிலும் உள்ள மஞ்சள்நிறக் கீற்று பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கும்?
1) இந்து சமுத்திரத்தால் சூழப்பட்ட நாடு என்பதை
2) நாட்டில் வாழும் சகல இனங்களின் ஒற்றுமையை
3) நாட்டில் முக்கிய இனங்கள் நான்கு உள்ளன என்பதை
4) நாட்டில் நான்கு மதங்கள் உள்ளன என்பதை

12. எமது நாட்டின் பண்டைக்காலம் பற்றிய தகவல்களை அறிய உதவுவது எது?
1) திரிபீடகம் 2) உபநிடதம் 3) ஆரியவம்சம் 4) மகாவம்சம்

13. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
1) வலைப்பந்து 2) எல்லே 3) வொலிபோல் 4) மென்பந்து

14. வலைப்பந்தாட்டக் குழுவிலுள்ள ஆட்டவீரர் தொகை (பதிலாட்டக்காரரைத்தவிர)
   1) 6  2) 7  3) 8  4) 9

15. இலங்கையின் தேசிய விளையாட்டைக் காட்டும் உரு எது?
   1) 
   2) 
   3) 
   4) 

16. வேடுவர்களின் வழிபாட்டு நடனம் எவ்வாறு அழைக்கப்படும்?
   1) பேயாட்டம்  2) கிரிகொரங்க  3) தில்லானா  4) தேவிநுவட்ட

17. இந்தியாவிலுள்ள அஜந்தா ஓவியங்களுக்கு ஒப்பான, கலைத்துவ படைப்புக்கள் காணப்படும் இடம் எது?
   1) சிகிரியா  2) கம்பளை  3) தலதாமாளிகை  4) எம்பக்க தேவாலயம்

18. சிகிரியா ஓவியத்திலுள்ள பெண்கள் கையில் ஏந்தியுள்ள பொருள் எது?
   1) சங்கு  2) தர்மசக்கரம்  3) நீரோற்பலம்  4) ஆடையணி

**பின்வரும் கூற்றுக்களுக்குச் சரியான விளக்கத்தைக் கீறிடுக.**

19. வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்.
   1. அணை கட்டுகையில் வெள்ளம் வந்தால் உடைந்துவிடும்.
   2. அணைகட்ட வெள்ளம் வரவேண்டும்.
   3. ஆபத்து வருமுன் பாதுகாப்பு மேற்கொண்டு ஆபத்து வராது பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

20. விளையும் பயிரை முளையிலே தெரியும்.
   1. முளை இல்லாத பயிர் முளைக்காது.
   2. பயிர் விளைய நீர் அவசியம்.
   3. எதிர்காலத்தில் ஒருவரது முன்னேற்றம் எப்படி இருக்கும் என அவரது சிறுவயது நடவடிக்கையிலேயே காணலாம்.

**பின்வரும் சொற்கள் ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட இரகசிய முறையில் எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ள முறையை அவதானித்து தரப்பட்ட வினாக்களுக்குரிய விடையின் கீழ்க் கோடிடுக.**

| | | |
|---|---|---|
| சரஸ்வதி - **JKLMN** | பாடசாலை - **EFGH** | அதிபர் - **RNOP** |

21. அதிபதி என்ற சொல்லுக்கு அமைய வேண்டியது.
   1. RNGN  2. RNHO  3. RNON  4. RONN

22. பார்வதி என்ற சொல்லுக்கு அமைய வேண்டியது.
   1. EPNM  2. EPMN  3. EPON  4. EOPN

**பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.**

23. எனக்கு 4 நண்பர்கள் உள்ளனர். நாம் ஒவ்வொருவரும் புதுவருட வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டோம். நாம் பரிமாறிக் கொண்ட வாழ்த்து மடல்கள் எத்தனை?
   1. 16  2. 18  3. 20

24. மாணவர்கள் மைதானத்தில் வரிசையாக நின்றனர். நடுவில் நிற்பவர் 11 ஆவது மாணவராயின் மைதானத்தில் நிற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   1. 20  2. 21  3. 22



**பின்வரும் ஒவ்வொரு வாக்கியங்களையும் ஒழுங்கு முறையாக எழுதினால் கருத்துள்ள தொடர் உருவாகும். அவ்வாறு சரியான ஒழுங்கில் உள்ள இலக்கங்களைக் கொண்ட விடையின் கீழ்க் கீறிடுக.**

25. 1) மாது தரம் 11 இன்  2) சென்று மிகத்திறமையாக உயர்கல்வி கற்று
   3) க.பொ.த (சா/த) பரீட்சையில்  4) ஒரு வைத்தியரானாள்
   5) தேர்ச்சி பெற்று நகர்புறப் பாடசாலை ஒன்றுக்கு
   1) 1, 5, 3, 4, 2  2) 1, 2, 5, 3, 4  3) 1, 3, 5, 4, 2  4) 1, 3, 5, 2, 4

26. 1) காரணமின்றி அலுவலகத்திற்கு  2) அறிவுரை கூறினார்
   3) நிர்வாகி ஊழியருக்கு  4) இதற்குப் பின்னர் எந்தவொரு ஊழியரும்
   5) தாமதமாக வரவேண்டாம் என  6) தாமதமாக வருவதில்லை
   1) 1, 5, 3, 2, 4, 6  2) 1, 5, 3, 2, 6, 4  3) 3, 2, 6, 1, 5, 4  4) 1, 5, 3, 6, 2, 4

**பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

27. ஆடு மேய்ப்பவன் - இடையன், தேர் செலுத்துபவன்
   1. தேரோட்டி  2. மாலுமி  3. பாகன்

28. மிளகாயின் உள்ளீடு - விதை, மாதுளையின் உள்ளீடு
   1. கொட்டை  2. சதை  3. முத்து

29. நாய் - குரைக்கும், சிங்கம்
   1. உறுமும்  2. கர்ச்சிக்கும்  3. முக்காரமிடும்

30. சுமன் சுதனைவிட உயரமானவன். சுதன் கரனைவிட உயரமானவன். இதனடிப்படையில் கூறக்கூடிய மிகச் சரியான கூற்று.
   1. சுமன் மூவரிலும் உயரமானவன்  2. சுமன் கரனைவிட உயரம் குறைந்தவன்
   3. சுதன் மூவரிலும் உயரம் குறைந்தவன்

31. அதிக நேரம் படித்தால் எனக்குத் தூக்கம் வந்துவிடும். இதன்படி கூறக்கூடிய மிகச்சரியான கூற்று.
   1. அதிக நேரம் படித்தால் மாத்திரம் எனக்குத் தூக்கம் வரும்.
   2. எனக்குத் தூக்கம்வர அதிக நேரம் படிப்பதும் ஒரு காரணம்.
   3. நான் அதிகநேரம் தூங்குவது படிப்பதனால் ஆகும்.

32. இரு எண்களைப் பெருக்கும்போது கிடைப்பது 20. அவ்விரு எண்களையும் கூட்டும்போது கிடைப்பது 9. அவ்விரு எண்களும் எவை? ..............................

33. ஒரு விருந்துபசாரத்தில் மொத்தமாக 80 பேர் பங்குபற்றினார்கள். அதில் ஆண்களின் எண்ணிக்கையை விட பெண்களின் எண்ணிக்கை 24 அதிகமாகும். எனவே அங்கு காணப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை யாது? ..............................

34. ஒரு செவ்வக வடிவ மைதானத்தின் நீளம் 250 மீற்றர். அகலம் 150 மீற்றர். இதன் சுற்றளவு எத்தனை மீற்றர்? ..............................

35. நந்துவின் நிறை 26kg 500g. சுந்து, பிந்து இருவர்களினதும் நிறைகள் சமன். நந்து, சுந்து, பிந்து மூவரினதும் நிறை 82kg 200g எனின் பிந்துவின் நிறை என்ன? ..............................

36. பயணம் ஒன்று 7 மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் வரை நடைபெற்று பி.ப. 9.50 மணிக்கு நிறைவடைந்தது. பயணம் ஆரம்பித்த நேரத்தை எழுதுக. ..............................

37. 215.3 உடன் 34.5 இனைக் கூட்டுக. ..............................

# பிரதமர் தலைமையிலான கூட்டம் முதல்வர் ஜெயலலிதா வெளிநடப்பு

## பேசுவதற்கு ஒதுக்கிய நேரம் போதாதாம்

(புதுடில்லி)

டில்லியில் நேற்று பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான மாநில முதல்வர்கள் மாநாட்டில் தமிழக முதல்வர் ஜெயலலிதா, திடீர் வெளிநடப்புச் செய்தார். இந்தக் கூட்டத்தில் தமக்கு 10 நிமிடமே பேச நேரம் தரப்பட்டது என்றும் இது போதாது என்றும் குறைபட்டு வெளிநடப்புச் செய்வதாக அறிவித்தார். இதனால் பிரதமர் தலைமையில் நடந்த கூட்டத்தில் சில நிமிடம் பரபரப்பானது.

ஏனைய முதல்வர்களுக்கு எல்லாம் 30 முதல் 35 நிமிடம் வழங்கப்பட்டுள்ளது. 10 நிமிடத்தில் எனது பேச்சை முடித்துக் கொள்ள மணி அடிக்கப்பட்டது. இது மிகப்பெரிய அவமானம், எனக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டிற்கே , தமிழக மக்களுக்கே ஏற்பட்ட அவமானம். பல மாநாடுகளில் பேசியிருக்கிறேன். இது போன்று நடந்ததில்லை. குறிப்பாக 10 நிமிடத்தில் தமிழகத்தின் தேவையை எடுத்து வைக்க முடியாது, இது பயனற்றது என்றும் முதல்வர் ஜெ. தெரிவித்தார். அவர் மேலும் கூட்ட அரங்கின் வெளியே நிருபர்களிடம் பேசுகையில்,

எதிர்ப்பு மாநில முதல்வர்கள் பேசப்படுவதற்கு வழங்கப்படும் நேரம் மிகக் குறைவு. இவ்வாறுக் குரல்வளையை நொறித்து, கேவலப்படுத்துவது ஏன்? இதற்கு எங்களை அழைக்காமல் இருக்க வேண்டியது தானே? எங்களுக்கு இந்த அளவு குறைந்த நேரம் கொடுக்கப்படுவது அர்த்தமற்றது, நான் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்துள்ளேன். இவ்வாறு ஜெயலலிதா கூறினார்.

இந்தியச் செய்திகள்



குஜராத் மாநில தலைநகர் அகமதாபாத்தில் சர்தார் பட்டேல் மைதானத்தில் நரேந்திர மோடி முதல்வராக பதவி ஏற்க செல்லும் போது பொது மக்களை நோக்கி வெற்றியின் சின்னத்தை காட்டுவதனைக்காணலாம் .

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏற தயாராகும் 19வயது மாணவி

(புதுடில்லி)

உலகின் உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்காக 19 வயது மாணவி சாச்சி சோனி தெரிவு செய்யப்பட்டுள்ளார். டார்ஜிலிங்கில் உள்ள ஹிமாலயன் மலையேற்றப் பயிற்சி நிறுவனம் சார்பில் 8 பேர் கொண்ட குழு, எவரெஸ்ட் சிகரத்தில் (8850 மீற்றர்) ஏறவுள்ளது. இந்தர்பிரசாத் கல்லூரியில் ஊடகவியல் பயிலும் மாணவி சாச்சி சோனியும்(வயது -19) இக்குழுவில் இடம் பெற்றுள்ளார். வரும் 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இக்குழுவினர் மலையேறவுள்ளனர்.

இது குறித்து சாச்சி, உலகின் உயர்ந்த சிகரமான எவரெஸ்டில் ஏறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டதை பெருமையாக உணர்கிறேன். கடுமையாக உழைத்து நாட்டுக்குப் பெருமை தேடித் தருவேன் என்றார். சாச்சி தனது 7ஆவது வயதிலேயே இது போன்ற சாகச விளையாட்டுக்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்.

அவர் பந்தர் புஞ்ச் சிகரம் (21,600 அடி), ரெனோக் சிகரம் (18,000 அடி), டி.கே.டி சிகரம் (17,800 அடி), வி.சி. ராய் சிகரம் (20,000 அடி) ஆகிய சிகரங்களில் ஏறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வட இந்தியாவில் கடும்குளிர் 25பேர் உயிரிழந்தனர்

(புதுடில்லி)

வட இந்தியா முழுவதும் நிலவும் கடும் குளிர் காரணமாக குறைந்தது 25 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. உத்திர பிரதேசத்திலேயே கூடுதலானோர் குளிருக்குப் பலியாகியுள்ளனர்.

ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா ஆகிய மற்ற வடஇந்திய மாநிலங்களிலும் கடுமையான குளிர் காலநிலை நிலவுகிறது.

வீடற்றவர்களும் வயது முதிந்தவர்களுமே உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள். தலைநகர் டில்லியிலும் அண்டை மாநிலங்களிலும் கடுமையான பனிமூட்டம் காரணமாக விமான சேவைகளும் ரயில் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

டில்லியில் வெப்பநிலை 7 பாகை வரை குறைந்து, கடும் குளிர் காணப்படுகிறது. அங்கு விமான பயண நேரங்களும் குழம்பியுள்ளன. ராஜஸ்தானில்





வெப்பநிலை 3.8 பாகை வரை குறைந்து மாநிலமே உறைந்து போயுள்ளது. அங்கும் ரயில்களும் விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் குளிர் காலநிலை இன்னும் பல நாட்களுக்கு நீடிக்குமென்று இந்திய வானிலை ஆய்வு நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் இராணுவ தளபதிக்கு இசட்பிரிவு பாதுகாப்பு விலக்கு



இராணுவ முன்னாள் தளபதி, வி.கே.சிங்கிற்கு அளிக்கப்பட்டு வந்த, "இசட்" பிரிவு பாதுகாப்பை இரத்துச் செய்ய, மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்திய இராணுவத் தளபதியாக இருந்த, வி.கே.சிங். கடந்த மே மாதம் ஓய்வு பெற்றார். இவருக்கு, "இசட்" பிரிவின் கீழ், பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இதன்படி, குண்டு துளைக்காத ஒரு கார் உட்பட, ஏழு வாகனங்கள், அவருக்கு கொடுக்கப்பட்டுள்ளன. 35 வீரர்கள், இவருக்கு பாதுகாப்பு அளித்து வருகின்றனர். சமீபகாலமாக, ஊழலுக்கு எதிராக, அன்னா ஹசாரே, அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்டோர் நடத்திய, போராட்டங்களில், வி.கே.சிங், பங்கேற்றார். சமீபத்தில், டில்லி மாணவி வல்லுறவிற்குட்பட்ட சம்பவத்தை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டத்திலும், பங்கேற்றார்

இதையடுத்து, அவர் மீது, எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சகம், சமீபத்தில் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில், வி.கே.சிங்கிற்கு, "இசட்" பிரிவு பாதுகாப்பு தேவையற்றது. எனவே, அவருக்கு அளிக்கப்பட்டு வரும், பாதுகாப்பை, வாபஸ் பெறலாம் என, முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக, இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. வி.கே.சிங், இராணுவத் தளபதி பதவியிலிருந்து, ஓய்வு பெறுவதற்கு முன், வயது சான்றிதழில் குழப்பம் நிகழ்ந்து விட்டதாக கூறி, பணி நீடிப்புக் கோரியிருந்தார்.

இதை, மத்திய அரசு, ஏற்க மறுத்து விட்டது. இந்த விவகாரத்தில், வி.கே.சிங்கிற்கும், மத்திய அரசுக்கும் இடையே, கருதது வேறுபாடு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# 38வீத குண்டானவர்கள் சென்னை வாசிகளாம்

(புதுடில்லி)

சென்னைவாசிகளில் 38 சதவீதம் பேர் உடல் பருமன் மற்றும் அதிக எடை கொண்டவர்கள் என்ற தகவல் தெரியவந்துள்ளது. அசைவ உணவுகளை அதிகம் சேர்த்துக்கொள்வதாலும், கொழுப்பு நிறைந்த பொருட்கள், நொறுக் குத்தீனிகள், ஐஸ்கிறீம் போன்றவற்றை அதிகம் சாப்பிடுவதாலும் உடல் பருமன் மற்றும் அதிக உடல் எடை பிரச்சினை ஏற்படுகிறது. இதுகுறித்து நாடு முழுவதும் சமீபத்தில் தேர்வு செய்யப்பட்ட 11 பெருநகரங்களில் ஆய்வு நடந்தது.

இதில் சென்னை மாநகரில் வசிப்போரில் 38 சதவீதம் பேருக்கு உடல் பருமன், அதிக எடை இருப்பது தெரியவந்துள்ளது. உடல் பருமனால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் மாநிலம் என்ற பட்டியலில் முதல் இடத்தில் இருக்கிறது பஞ்சாப். அடுத்த இடங்களில் கோவா, ராஜஸ்தான் உள்ளன. 4ஆம் இடத்தில் தமிழகம் உள்ளது. சென்னைப் பெண்களில் 41 சதவீதம் பேர் உடல் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

31,55வயதினருக்கு இப்பிரச்சினை அதிகம் உள்ளது. தவறான உணவுப் பழக்கத்தால் 62 சதவீதம் பேருக்கும், அதிகளவில் எண்ணெய், கொழுப்பு சேர்ப்பதால் 53 சதவீதம் பேருக்கும், வாழ்க்கை முறை மாறியதால் 43 சதவீதம் பேருக்கும் உடல் பருமன் ஏற்படுகிறது. உடல் பருமனால் பாதிக்கப்பட்டவர்களில் 43 சதவீதம் பேரிடம் அதுபற்றிய கவலை கொஞ்சம் கூட இல்லை. ஆரோக்கியமாக வளர்ப்பதாக கருதிக்கொண்டு சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கொழுப்புச் சத்து மிக்க பொருட்களை வாங்கிக் கொடுபபதால் 6ஆம் வகுப்பு படிக்கும் குழந்தையும் 35 கிலோ முதல் 40 கிலோ எடை வரை உள்ளது.

இவர்களுக்கு பின்னாளில் பெரிய அளவிலான வியாதிகள் ஏற்படும். எனவே உடல் பருமன் மற்றும் எடை அதிகம் உள்ளவர்கள் முறையான உடற்பயிற்சிகள், நடைப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# டில்லி மாணவி சிங்கப்பூரில்

(புதுடில்லி)

தலைநகர் டில்லியில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளான மாணவி சிகிச்சைக்காக சிங்கப்பூர் கொண்டு செல்லப்படுவதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பெயர் விபரங்கள் வெளியிடப்படாத அந்த மாணவியின் குடல் பகுதி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அவருக்கு அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேல் சிகிச்சைக்காக விமான அம்புலன்ஸ் மூலமாக கடந்த புதன்கிழமை இரவு அவர் சிங்கப்பூர் கொண்டு செல்லப்பட்டார்.

அவருக்கும், அவரது பெற்றோருக்கும் இந்திய அரசு விசா பெற்றுக் கொடுத்துள்ளது. ஏற்கனவே அவர் அனுமதிக்கப்பட்டிருந்த புதுடில்லி மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் இது குறித்து கருத்துக் கூற முடியாது என்று தெரிவித்துள்ளார். அந்தப் பெண்ணின் உடல் நிலை சற்று முன்னேறியதாக தகவல் கூறப்பட்டது. அவரிடமிருந்து பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# சிரிய இராணுவத்தளபதி புரட்சிப்படையில் இணைவு

## அரச படையினருக்கு பின்னடைவு



சிரியாவில் இராணுவ தளபதி ஒருவர், புரட்சிப் படையினருடன் இணைந்துள்ளது அரசுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தை பதவி விலகக் கோரி, புரட்சிப் படையினர் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அசாத் பதவி விலக மறுத்ததால் புரட்சிப் படையினரை அங்கீகரித்து, அவர்களுக்கு அமெரிக்கா ஆயுதம் வழங்கி வருகிறது. இதனால் சிரியாவில் ஓயாத சண்டை நடக்கிறது.

கடந்த 22 மாதங்களில் 50 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர், இரண்டு இலட்சம் பேர் அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ரஷ்யா, சீனா, ஈரான் ஆகிய நாடுகள் சிரியாவை ஆதரிக்கின்றன. ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் பிடிவாத போக்கைக் கண்டித்து, துணை ஜனாதிபதி உள்ளிட்ட பலர் பதவி விலகி விட்டனர்.

இதற்கிடையே சிரியாவின் இராணுவத் தளபதி அல்-ஷலால், பதவி விலகி புரட்சிப் படையினருடன் கைகோர்த்துள்ளார்.

அவர் கூறுகையில், சிரிய இராணுவம் மக்களை கொல்லும் கொலை வெறி கும்பலாக மாறி விட்டது எனத் தெரிவித்துள்ளார்.

# காலை தொழுகை நேரத்தில் விமானங்கள் பறக்கத்தடை

(தெஹ்ரான்)

ஈரானில், காலை தொழுகையின் போது, விமானங்கள் பறக்க, அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.இஸ்லாமிய நாடான, ஈரானில், இஸ்லாமிய சட்டங்கள் கடுமையாக பின்பற்றப்பட்டு வருகின்றன.பெண்கள் பர்தா அணிந்து தான் வெளியே வரவேண்டும் உள்ளிட்ட நடைமுறைகள் இன்று வரை, பின்பற்றப்பட்டு வருகின்றன.இதற்கிடையே, “காலை தொழுகையை அவசியம் செய்ய வேண்டும் என்பதற்காக, அந்த நேரத்தில் விமான புறப்பாடு இருக்கக்கூடாது. காலை தொழுகை முடிந்து அரை மணி நேரத்துக்கு பிறகு, விமானங்கள் புறப்பட வேண்டும். இதன் மூலம், அனைவரும் காலை தொழுகையில் கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்” என, அந்நாட்டு அரசு உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது

# வெள்ளத்தில் மிதக்கும் மலேசியா 14 ஆயிரம் பேர் வீடுகள் இழப்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் ஏற்பட்ட பலத்த மழை வெள்ளத்தால் பல ஆயிரம் பேர் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர். 2பேர் பலியாகியுள்ளனர். கெமான என்ற இடத்தில் உள்ள பகிட் மென்டாக் என்ற பகுதியில் 15 வயது சிறுவன் வெள்ள நீரில் மூழ்கி உயிரிழந்தான். அந்தச் சிறுவன் உள்ளிட்ட சிலரை படகில் மீட்டு வந்து கொண்டிருந்தபோது அவன் தடுமாறி வெள்ள நீரில் மூழ்கி விட்டான். பலத்த வெள்ளம் என்பதால் மின்னல் வேகத்தில் அந்தச் சிறுவன் அடித்துச் செல்லப்பட்டு விட்டான். அவனது நண்பனும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளான். அவனும் பலியாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. மழை வெள்ளத்திற்கு இதுவரை 14,000 பேர் வரை வீடுகள், உடமைகளை இழந்து தவித்து வருகின்றனர்.



# தென்கொரியாவிற்கு ஆயுதம் வழங்குகிறது அமெரிக்கா

(சியோல்)

வடகொரியா பெருமளவு ஆயுதங்களை குவித்து வைத்துள்ளதாகவும், அந்த நாடு அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் உலகின் பல நாடுகள் கூறுகின்றன.வடகொரியாவின் ஆயுதப் போட்டியை சமாளிக்கும் அளவுக்கு தென் கொரியாவும் அதிரடி நடவடிக்கையில் இறங்கி உள்ளது. அமெரிக்காவிடம் இருந்து அதிநவீன உளவு விமானங்களை தென்கொரியா வாங்கவுள்ளது. இதற்கான பேச்சுவார்த்தை 4 ஆண்டுகளாக நடந்து வந்தது.இதன் படி தென்கொரியாவுக்கு 4 அதிநவீன குளோபல் ஹாக் உளவு விமானங்களை அமெரிக்கா வழங்கும். 4 விமானங்களின் விலை ரூ.6 ஆயிரத்து 600 கோடி ஆகும்.

உலகச் செய்திகள்

# திடீரென வெடித்தது நிக்கரகுவா எரிமலை



நிக்கரகுவாவில் மிகப்பெரிய எரிமலை திடீரென வெடித்ததால், கிராம மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

அமெரிக்க நாடான நிக்கரகுவாவில் சினான்டெக்கா நகரம் அருகே சான் கிறிஸ்டோபல் என்ற இடத்தில் எரிமலை உள்ளது.

இந்த எரிமலை திடீரென வெடித்து சிதறியதால், கரும்புகை வெளியாகி வானத்தில் பல நூறு மைல் சுற்றுக்கு படர்ந்தது.

எனவே விமானங்கள் பறக்கத் தடை விதித்ததுடன், எரிமலையை சுற்றி வசிக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

மேலும் இதிலிருந்து வெளியாகும் வெப்பம் 2,500 மீற்றர் பரப்பளவுக்கு தாக்குகிறது. கடந்த செப்ரெம்பர் மாதம் இந்த எரிமலை வெடித்ததில், கால்நடைகள் பலியானமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் வீடு கட்ட இலஞ்சம் கொடுத்த ஒசாமா



அல் கொய்தா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன், பாகிஸ்தானில் தங்குவதற்காக வீட்டைக் கட்ட, அனுமதி வழங்குவதற்காக வருவாய் அதிகாரிக்கு ரூ.50 ஆயிரம் இலஞ்சம் கொடுத்துள்ளார்.

பாகிஸ்தானின் உருதுப் பத்திரிகை ஒன்றில் இந்தச் செய்தி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பட்வாரி என்ற அந்த அதிகாரி, ஒசாமா மூன்று அடுக்கு மாடி கட்டிக் கொள்ளவும், 14 அடி உயர பெரிய சுற்றுச் சுவர் கட்டிக்கொள்ளவும் அனுமதி வழங்கியுள்ளார்.

மேலும், அதில் இரும்புக் கம்பிகளால் ஆன வேலி போடவும் அனுமதி வழங்கியுள்ளார்.

இதற்காக அவர் இலஞ்சமாக ரூ.50 ஆயிரம் பெற்றுக் கொண்டார்.

இந்தத் தகவல் ஒசாமா பின்லேடன் எழுதி வைத்த டயறியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டு பின்னர் வெளியாகியுள்ளது.

கடந்த வருடம் மே 2ஆம் திகதி, அமெரிக்க தாக்குதலில் ஒசாமா (வயது 54) உயிரிழந்த பின்னர் அவரது வீட்டில் இருந்து அமெரிக்க இராணுவத்தினர் சில ஆவணங்களைக் கைப்பற்றினர்.

டயறி உள்ளிட்ட அந்த ஆவணங்களின் மூலம் ஒசாமாவின் நடவடிக்கைகளை அறிந்தனர். ஒசாமா தினமும் டயறி எழுதும் வழக்கம் கொண்டவராம்.

இதில்தான் அந்த இடத்தில் முதலில் கம்பவுண்ட் சுவர் கட்ட அனுமதி கேட்டபோது ரூ.50 ஆயிரத்தை பட்வாரிக்கு இலஞ்சமாகக் கொடுத்ததை எழுதியுள்ளார்.



அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா மற்றும் அவரது மனைவி மிச்செல் ஒபாமா ஆகியோர் ஹவாயில் உள்ள கப்பற்படை தளத்தின் அண்டர்சன் ஹோலில் நடைபெற்ற விருந்துபசார நிகழ்வில் இராணுவ அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை வரவேற்பதனைக் காணலாம்.

# உலகில் அதிவேக ரயில்பாதை அறிமுகம் செய்தது சீனா



உலகில் மிக நீளமான அதிவேக ரயில் பாதையை சீனா உத்தியோகபூர்வமாக திறந்து வைத்துள்ளது.

பீஜிங்கிற்கும் கங்சூ நகருக்கும் இடையில் இந்த அதிவேக ரயில் பாதை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இரண்டாயிரத்து 298 கிலோமீற்றர்கள் நீளம் கொண்ட இந்தப் பாதையில் 35 இடங்களில் மாத்திரமே ரயில்கள் நிறுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் புதிய ரயில் பாதையின் மூலம் 22 மணித்தியாலங்களுக்கான பயணம் 10 மணித்தியாலங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

உலக தொழில்நுட்பத்தின் முக்கிய ஒரு விடயமாக சீனாவினால் புதிய ரயில் பாதை நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சீனாவின் முன்னாள் தலைவர் மாசேதுங்கின் ஜனன தினத்தை நினைவுகூரும் வகையில் அதிக நீளமான ரயில் பாதை திறந்து வைக்கப்பட்டுள்ளது

# சொத்துக்களை வெளியிடாத அரசியல்வாதிகளுக்கு ஆப்பு

## தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

சொத்து விபரங்களை இதுவரையில் வெளியிடாத அரசியல்வாதிகளின் பெயர்கள் அம்பலப்படுத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். அவ்வாறு சொத்து விபரங்களை வெளியிடாது இருப்பவர்களுடைய பெயர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் வெளியிடப்படும.

இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதான அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும், தங்களுடைய சொத்து விபரங்கள் பற்றிய தகவல்களை வழங்கி வருகின்றனர். மேலும் சில கட்சிகளும் அரசியல்வாதிகளும் இதுவரையில் சொத்து விபரங்களை அறிவிக்கவில்லை. எனினும் சொத்து விபரங்கள் வழங்கியவர்களின் விபரங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக வெளியிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அடுத்தாண்டு ஜனவரியில் சொத்து விபரங்கள் வெளியிடப்படாதவர்களது பெயர்கள் அம்பலப்படுத்தப்படும் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துளளார். இதேவேளை அரசியல்வாதிகள் தமது சொத்து விபரங்களை வெளியிடவேண்டும் என தேர்தல் திணைக்களத்தினால் பலதடவை அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் இதை மீறுவோரது பெயர்களை மக்களுக்கு அம்பலப்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ளும் படியும் பவரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றொஹான் ஹெட்டியாராட்சி தேர்தல் ஆணையாளரிடம் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கினார் ராஜீவ்

## விக்கிலீக்ஸ் பரபரப்புத் தகவல்

இந்திய அரசாங்கம், விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு 580 மில்லியன் இந்திய ரூபாவினை உதவியாக வழங்கியதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுபபிவைத்த குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டு யூலை மாதம் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, புலிகளுக்கு நிதி உதவிகளை வழங்கியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும், ராஜீவ் காந்திக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய - இலங்கை உடன்படிக்கையின் மூலம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்படக்கூடிய வரிவருமான இழப்பினை ஈடுசெய்யும் நோக்கில் இவவாறு வழங்கப்பட்டுள்ளது என விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

## நான்கு...

அதிகாரிகள் அங்கு இருக்கவில்லை என்று மேற்படி பீடாதிபதி மேலும் தெரிவித்தார். நேற்றையதினம் விடுமுறைநாள் என்பது குறிப்பிடத்தக்கது. (25)

# பதவிநிலை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடு பற்றி ஆராய்வு

வடமாகாண சபையின் கீழ் கடமையாற்றும் பதவி நிலை வெளிக்கள உத்தியோகத்தர்களின் கலந்துரையாடல் நேற்றுக் காலை 10.00 மணிக்கு யாழ் நகர் புதிய உயர் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் சமூகசேவைகள் உததியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர். அரச சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய சேவைப்பிரமாணக் குறிப்பு, சம்பள அளவுத்திட்டம் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டது.

ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் இது தொடர்பாக எதிர நோக்கும் பிரச்சினைகள், அவர்களது அபிப்பிராயங்களைப் பெற்று அறிக்கை தயாரிப்பதெனவும், உருவாக்கப்படவுள்ள தொழிற்சங்க சம்மேளனத்தின் யாப்பு விதிகளைத் தயாரிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ் அறிக்கைகளையும் யாப்பையும் ஆராய்ந்து முடிவெடுக்கும் பொதுக்கூட்டம் 12.01.2013 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.நகர் ஆரியகுளம் சந்தி, புதிய உயர் கல்லூரியில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அன்றைய தினமே வடமாகாண சபையின் கீழ் கடமையாற்றும் பதவி நிலை வெளிக்கள உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க சம்மேளனம் உருவாக்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## என்னைப்...

போலிப் பிரசார நடவடிக்கைகளுக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு சிலரே பிரதான காரணமாக இருந்து வருகின்றனர். எனினும் சட்ட ரீதியாக தம்மை பதவி விலக்கிக்கொள்ள முடியாது என்பதை அரசாங்கம் நன்கு அறியும். அதனை கருத்திற்கொண்டே ஊடகங்களின் மூலம் பிராசாரம் மேற்கொண்டு தன்னை பதவி விலகுவதற்கு அழுத்தம் கொடுப்பதே நோக்கமாக அமைகின்றது எனவும் அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.

## விதிகளை...

இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட உணவு, மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் திடீரெனச் சோதனை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

ஆயுர்வேதம் படித்தவர்கள் ஆயுர்வேத வைத்திய முறைமைகளையும் அது சம்பந்தப்பட்ட மருந்துகளையும் நோயாளிகளுக்குப் பயன்படுத்துவதே முறையாகும். அதனை விடுத்து அவர்களுக்குச் சம்பந்தமில்லாத ஆங்கில வைத்தியத்தையும் இதனோடு இணைப்பது பொருத்தமில்லாததாகும் எனப் பலராலும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் வைத்தியம் எனக் கூறப்படும் ஆயுர்வேத வைத்தியத்துக்காகவே சிலர் இவ் வைத்தியர்களை நாடிச் செல்கின்றனர். இப்படி செல்லும் இவர்களுக்கு ஆங்கில மருந்து வகைகளை ஆயுர்வேத வைத்தியர்கள் கொடுப்பதினால் நோயாளர்கள் பெரும் விசனத்திற்குள்ளாவதாகத் தெரியவருகின்றது.

ஆயுர்வேத வைத்தியம் பல சிறப்புக்களைக் கொண்டதாகும். நீண்டகால நோய்களையும் மாற்றக்கூடிய வல்லமை கொண்ட மருந்து வகைகள் இவ் வைத்திய முறையில் உள்ளன. ஆயுள்வேத வைத்தியர்கள் இதனை உணர்ந்து செயற்படல் வேண்டும் என பல தரப்பட்டவர்களினாலும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.(137)

## வடக்கில்...

குண்டுகளைப் பயன்படுத்தியது தொடர்பாகவும், இரசாயன ஆயுதங்களைப் பாவித்தது தொடர்பாகவும் ஆதாரங்கள் வெளியாகியிருந்தன. இவற்றை வெளியிட்டதில் வடபிராந்திய மிதிவெடியகற்றல் நிறுவனத்திற்கும் தொடர்புள்ளதாக நம்பப்படுவதனாலேய அடுத்த வருடம் முதல் மிதிவெடியகற்றலை அரசாங்கம் பொறுப்பேற்றக திட்டமிட்டுள்ளது.

குறிப்பாக இறுதி யுத்தம் நடைபெற்ற ஒரு சில பகுதிகளில மிதிவெடியகற்றலை இதன் மூலம் இராணுவத்தைக் கொண்டே அரசு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

## கெட்டுப்போகும்...

காணப்படுகின்றார்கள். தரச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்காகச் சில நாட்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வந்த சில உணவகங்கள், அவை கிடைக்கப்பெற்றதன் பின்னர் மீண்டும் சுகாதாரச் சீரழிவுடன் காணப்படுகவதாகப் பல பொதுமக்களினால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பண்டங்கள், மதிய உணவுகள், காலை, மாலை பலகாரங்கள் போன்றவற்றை மட்டுமே விற்பனை செய்யப்படுவதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட சில உணவகங்கள் சவர்க்காரம், சம்பூ, சலவைப் பவுடர் மற்றும் பல அழகு சாதனப்பொருட்களையும் விற்பனைக்காக வைத்திருப்பதைக் காணமுடிகின்றது.

ஏதோ சான்றிதழைப் பெற்றுக்கொண்ட உணவகங்கள் அவற்றுக்குரிய தகுதியான நிலையில் காணப்படவில்லை எனப் பலரினாலும் குறைகூறப்படுகின்றது. அத்துடன் சில உணவகங்களுக்கு இன்னும் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

உணவகங்கள் அடிக்கடி சுகாதாரப் பிரிவின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படல் வேண்டும். சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படும் உணவகங்கள் மீது உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியமாகும். இதன்மூலமே உணவகங்களில் சுகாதார மேம்பாட்டை உயர்வடையச் செய்யமுடியும் எனப் பொதுமக்களினால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (137)

## ஷிராணியின்...

போது நாடாளுமன்றத்திற்கு விசேட அதிகாரம் இருக்கின்றது. எனினும் எதற்கும் ஒரு வரையரை இருக்கின்றது. அதற்கு அப்பால் யாரும் செல்ல முடியாது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பு ஏற்கனவே கிடைத்துள்ளது. அது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை. தெரிவுக்குழுவின் செயற்பாடானது ஜனாதிபதியின் அறிவிப்புடனேயே நிறைவடையும். அதனால் அவருக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஒரு குழுவை அவர் நியமித்துக் கொள்ளலாம். அந்த குழுவை நியமிப்பதன் மூலமாக எனது தலைமையிலான தெரிவுக குழுவை ஜனாதிபதி குறைத்து மதிப்பிடவில்லை.

பிரதம நீதியரசருக்கு எதிராக 14 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அதில் 5 குற்றச்சாட்டுகளை மட்டுமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டோம். இரண்டு குற்றச்சாட்டுகளில் இருந்து அவரை விடுதலை செய்துள்ளோம். குற்றப்பிரேரணையில் உள்ள குற்றங்களில் ஒன்றுக்கு மட்டுமே பிரதம நீதியரசர் பதிலளித்தார். அந்த தெரிவுக்குழுவுக்கு தன்னுடன் ஒரேயொரு சட்டத்தரணியை மட்டுமே அழைத்துவர முடியும். எனினும், 7 சட்டத்தரணிகளை தன்னுடன் அழைத்து வருவதற்கு நாம் இடமளித்தோம்.

தெரிவுக்குழு விசாரணையில் இருந்து பிரதம நீதியரசர் வெளியேறியதுடன் எதிரணியினரும் வெளியேறிவிட்டனர். எதிரணியினர் எழுந்து செல்லாமல் எமது அறிக்கைக்கு எதிரான அறிக்கையொன்றை சமர்ப்பித்திருக்கலாம். பிரதம நீதியரசருக்கு எதிராக எம்மால் எந்தவிதமான ஆவணங்களும் முன்வைக்கப்படவில்லை. அவரிடம் இருந்த ஆவணங்கள் மட்டுமே எம்மால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், நீதியரசர் ஷிராணி திலகவர்தன ஆகியோரே தெரிவுக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்தனர். எதிரணியினரும் வெளிநடப்பு செய்யாமல் இருந்திருந்தால் அவர்களிடம் எதிரணியினர் குறுக்கு விசாரணை செய்திருக்கலாம். எதிரணியினர் வெளிநடப்பு செய்ததன் பின்னர் நாங்கள் என்ன செய்வது. நாம் விசாரணைகளை முன்னெடுத்துச் சென்றோம்.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரமே தெரிவுக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. பல நாடுகளில் பல முறைமைகள் இருந்தாலும் தெரிவுக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் நாடாளுமன்றத்திற்கு ஜனாதிபதி அறிவித்து விட்டு பதவி விலக்குவார். பிரித்தானியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் அரசியலமைப்புகளிலும் இந்த முறைமையே இருக்கின்றது.

பிரதம நீதியரசரை யாரும் தூற்றவில்லை. தெரிவுக்குழுவில் ஒலிவாங்கி முடுக்கிவிடப்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் பேசப்பட்ட சகல விடயங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன. ஒலிப்பதிவும் செய்யப்பட்டுள்ளன. அவற்றை சபாநாயகர் மற்றும் ஹன்சாட் திணைக்களத்தின் அனுமதியின்றி யாரும் பார்வையிட முடியாது. தெரிவுக்குழுவின் அறிக்கையை இதயசுத்தியுடன் தயாரித்துள்ளோம். தெரிவுக்குழுவிலிருந்து எழுந்து செனறிருக்காவிடின் விசாரணை 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதிவரை தொடர்ந்திருக்கும் என்றார்.

## வெள்ள ஆபத்தில்...

இதனால் இக்குளத்தின் நீர்க்கொள்ளளவின் உச்சநிலைக்கு நீர்மட்டம் உயர்ந்தது. நீர்வரத்து தொடர்ந்தும் காணப்படுவதால் குளத்தின் நீர் மட்டம் அபாய அளவை எட்டும் என்பதனாலேயே அனைத்து வான் கதவுகளையும் முழுமையாகத் திறப்பது என்று முடிவுசெய்யப்பட்டது.

அதேவேளை இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் இரவு ஒன்பது மணியளவில் 33 அடியாகக் காணப்பட்டது. இந்த நிலையில் குளததின் அனைத்து வான்கதவுகளும் முழுமையாக திறந்துவிடப்பட்டது.

இந்தநிலையில் நேற்று இரவு கிளிநொச்சி இரணைமடுக் குளத்திற்கு நேரடியாக சென்ற நாடளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அங்கு கிளி நொச்சி நீர்ப்பாசனத் திணைகளத்தின் பிரதிப் பணிப்பாளர் சுதாகரன் உள்ளிட்ட அதிகாரிகளுடன் குளத்தன் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

தற்போது குளத்திற்கு ஒரு செக்கனுக்கு 15223 கன அடி நீர் வருவதோடு ஒரு செக்கனுக்கு 10262 கன அடி நீர் வெளியேறுகிறது தற்போது குளத்தின் நீர்கொள்ளலவு ஒரு இலட்சம் ஏக்கர் அடியாக காணப்படுகிறது.

இதேநிலைமையில் தொடர்ந்தும் மழைபெய்து நீர் வரத்து அதிகமாகக் காணப்பட்டால் குளத்தின் நீர்மட்டம் 34 அடியாக உயர்ந்ததால் அனைத்து வான் கதவுகளுக்கூடாகவும் முழுமையாக நீர் வெளியேறினாலும் கலிங்கு பாயும் நிலைமையும் ஏற்படலாம் என நீர்ப்பாசனத்திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் சுதாகரன் தெரிவிக்கின்றார். எனவே அவ்வாறு கலிங்கு பாய்கின்றபோது தற்போது வெளியேறுகின்ற நீரின் அளவினைவிட இரண்டுமடங்கு நீர் வெளியேறும் என்பதால் இரணைமடுக் குளத்தின் கீழான பகுதிகளிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் விசிக்கும் மக்கள் அவதானமாக இருக்கும் படியும் கேட்டுக்கொள்ளபடுகின்றார்கள்.

# வெள்ளத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடி உதவிகள்





(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் வெள்ளப்பாதிப்புக்கள் ஏற்பட்டு மக்கள் இடம்பெயந்து பாடசாலைகளிலும் பொது மண்டபங்களிலும் தங்கியுள்ளனர்.

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் 142 குடும்பங்களைச் சேர்ந்த 642 அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்து சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் தங்கியுள்ளனர். இவர்களை நேற்றுச் சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அந்த மக்களுக்குத் தேவையான உலருணவு மற்றும் உணவல்லாத பாய், தறப்பாள், படுக்கை விரிப்பு, உள்ளிட்ட பொருட்களை வழங்குவதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதோடு, அதில் ஒரு தொகுதிப் பொருட்களை கிராம அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் கையளித்துள்ளார். இதேவேளை, இவர்களுக்கான மருத்துவச் சேவையினை கிளிநொச்சி வைத்தியசாலை உளநல மருத்துவர் வைத்தியர் ஜெயராசா தலைமையில் வைத்திய அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## புத்தளத்தில் மீன் மழை

நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று மீன், மஞ்சள் மற்றும் சிவப்பு மழை பெய்துள்ளது. இந்நிலையில், புத்தளம், சிரம்பியடிப் பிரதேசத்தில் மீன் மழை பெய்ததாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

சாதாரண மழையுடன் கூடிய இந்த மீன் மழையின் போது ஓரிடத்திலிருந்து மாத்திரம் சுமார் 50, 60 மீன்கள் சேகரிக்கப்பட்டதாக அம்மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, ஹபரண, பலுகஸ்வெள பிரதேசத்தில் சிவப்பு மழை பெய்துள்ள அதேநேரத்தில், ஹபரண, காச்யப கிராமத்தில் மஞ்சள் மழை பெய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஹொரவப்பொத்தானை மற்றும் மரதன்கடவல பிரதேசங்களுக்கும் நேற்றுக் காலை 11.30 மணியளவில் மஞ்சள் மழை பெய்ததாக பிரதேசவாசிகள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹக்கீம் - சுரேஷ் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரித்தானிய குடியுரிமை கொண்ட தமிழரை பிரித்தானிய சிறைச் சாலைக்கு மாற்றுவது தொடர்பில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும் இடையில் பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இதன்போதே பிரித்தானிய குடியுரிமை கொண்ட தமிழரை பிரித்தானிய சிறைச்சாலைக்கு மாற்றுவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு இந்த விவகாரம் தொடர்பில் உத்தியோகபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்தால் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

புலிகளுடன் தொடர்புகளை கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே புலம்பெயர்ந்த தமிழர்களை பயங்கரவாத மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கு இடையில் 1995 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். 95/5 சட்டத்தின் பிரகாரமே கைதியை பரிமாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்களுடைய பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பெருக்கெடுத்தது பாலியாறு; ஏ-32 வீதிப் போக்குவரத்து துண்டிப்பு

மன்னார் பாலி ஆறு பெருக்கெடுத்துள்ளதால் மன்னாரில் இருந்து சங்குப்பிட்டி - பூநகரி வழியாக யாழ்ப்பாணம் செல்லும் பாதையூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. குறித்த ஏ-32 வீதியில் ஆங்காங்கே நீர் நிரம்பியோடுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

இதனால் மன்னாரில் இருந்து பயணிகள் போக்குவரத்து பஸ்ஸில் செல்லும் நபர்கள் இலுப்பக்கடவை எனும் இடத்தில் இறக்கப்பட்டு உழவு இயந்திரம் ஒன்றில் ஏற்றப்பட்டு பாலி எனும் இடத்தில் இறக்கப்பட்டு மீண்டும் யாழ். நோக்கி பஸ்ஸில் பயணம் செய்கின்றனர்.

உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்டும் ஒவ்வொருவரிடம் இருந்தும் தலா 150 ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது.

ஏ-32 வீதியை அண்மித்துள்ள தேத்தாவானி என்ற கிராமத்துக்கான தரைவழி போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்குள்ள 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அவசர சேவையை வழங்கவென சிறிய ரக படகொன்று தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக செய்தியாளர் குறிப்பிட்டார்.

## புகலிடதாரிகள் மோதல்

அவுஸ்ரேலியாவில் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு இடையில் இடம்பெற்ற கைகலப்பில் உத்தியோகஸ்தர்கள் உட்பட 7 பேர் காயமடைந்துள்ளனர். பப்புவா நியூகினி, மனுஸ் தீவுகளிலுள்ள அவுஸ்ரேலியா குடிவரவு தடுப்பு மத்திய நிலையத்திலேயே நத்தார் தினத்தன்று இந்தக் கைகலப்பு இடம்பெற்றுள்ளது.

ஏழு பேரும் சிறு காயங்களுக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவித்த குடிவரவு அமைச்சரின் பேச்சாளர் கிரிஸ்போவன் தமிழ் அகதிகளுக்கும், ஈரான் அகதிகளுக்கும் இடையிலேயே இந்த கைகலப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். முகாமிலுள்ள இணையத்தள அறையொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிறு காயமடைந்தவர்கள் சிகிச்சைப்பெற்று வருகின்றனர். குறித்த நிலையத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், எவரையும் இதுவரையில் கைது செய்யவில்லை என்றும் தெரிவித்தனர். இந்த தடுப்பு முகாமில் இலங்கை, ஈரான்,ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களே தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டு ஊடகம் செய்திவெளியிட்டுள்ளது.

## ஊடகக் கொள்கைகளை விபசாரம் செய்வதா?



### பெட்ரிக்கா கடுப்பு

முன்னணி வார இறுதிப் பத்திரிகைகளில் ஒன்றான சண்டே லீடர் விமர்சனப் பாங்கான கருத்துக்களை வெளியிடுவதில்லை என அதன் முன்னாள் பிரதம ஆசிரியர் பெட்ரிக்கா ஜேன்ஸ் தெரிவித்துள்ளார். தற்போதைய செய்தி ஆசிரியர் குழாம், ஊடகக்கொள்கைகளை விபச்சாரம் செய்வதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசியல் தலைவர்களை திருப்திப்படுத்தும் நோக்கில் செய்திகள் வெளியிடப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். பத்திரிகையின் புதிய உரிமையாளர் தம்மை பணி நீக்கம் செய்ததாகத் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட ஆக்கங்களுக்கு அரசாங்கத்திடம் மன்னிப்பு கோரும் வகையில் ஆக்கங்கள் பிரசுரமாகி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பத்திரிகை வழமை போன்று விமர்சனப்பாங்கான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக தற்போதைய பிரதம ஆசிரியர் சகுந்தலா பெரேரா தெரிவித்துள்ளார். பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெலிக்கடைச் சிறைச்சாலைத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் போன்றன தொடர்பில் அரசாங்கத்தை விமர்சனம் செய்து கட்டுரைகள் வெளியிடப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்னாள் பிரதம ஆசிரியர் அமரர் லசந்த விக்ரமதுங்கவின் மறைவின் பின்னர் பத்திகையின் விமர்சனப் பாங்கு மற்றும் செய்திக் கோணங்களில் மாற்றங்கள் ஏற்பட்டமையை மறுக்க முடியாது என பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

## இலங்கையருக்கு டுபாயில் சிறை

(கொழும்பு)

இலங்கை தம்பதியினருக்கு டுபாய் குற்றவியல் நீதிமன்றம் ஆறு மாதகால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரிக்கு இலஞ்சம் கொடுக்க முயன்ற குற்றச்சாட்டிலேயே அவ்விருவரும் அந்த நாட்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர். அந்த நாட்டிலிருந்த பெண்ணை(மனைவியை) நாட்டுக்கு வெளியே சட்டவிரோதமாக அழைத்து செல்வதற்காக அதிகாரிகளுக்கு 10,000 டினார்களை கொடுக்க முயற்சித்தாக அந்த தம்பதியினர் மீது குற்றச் சாட்டப்பட்டிருந்தது.

தங்களுடைய தண்டனை காலம் நிறைவடைந்ததன் பின்னர் தம்பதியினர் நாடு கடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## முதன் முறையாக 3 அடிக்கு வான் பாயும் வவுனிக்குளம்

(கிளிநொச்சி)

வடக்கின் இரண்டாவது பெரிய குளமான வவுனிக்குளம் முதல் முறையாக மூன்று அடிக்கு வான் பாய்கின்றது.

நாட்டில் நீடிக்கும் காலநிலை மாற்றத்தால் நாட்டின் அனைத்துப் பகுதிகளும் மழை வெள்ளத்தில் மிதக்கிறது. இந்தச் சமயத்தில் வடக்கின் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என எல்லாப் பகுதிகளிலும் உள்ள குளங்கள் வான் பாய்வதுடன், சில குளங்கள் உடைப்பெடுக்கும் நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலையில், கடந்த காலங்களில் இரண்டரை அடி வரை வான் பாய்ந்த வவுனிக்குளம் வரலாற்றில் முதன் முறையாக மூன்று அடிக்கு மேல் வான் பாய்வதுடன், வான் பாயும தாழ் நிலப்பகுதியில் இருந்த மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

## கைதிகளைப் பார்வையிட வெலிக்கடை செல்கிறது குழு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை தூதுக்குழுவொன்று இன்று சென்று பார்வையிடவுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன, தம்பர அமில தேரர் மற்றும் மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப் ஆகியோரே வெலிக்கடை சிறைச்சாலைக்கு நாளை செல்லவுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளை அவர்களுடைய குடும்ப உறவினர்களினால் பண்டிகை காலத்திலும் சென்று பார்வையிட முடியாதிருந்தது. சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளை பார்வையிடுவதற்கு அவர்களுடைய உறவினர்களுக்கு நத்தார் பெருநாள் மற்றும் வெசாக் ஆகிய தினங்களில் அனுமதியளிக்கப்படும். இந்தக் கைதிகள் யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச்சேர்ந்தவர்கள் என்பதனால் அவர்களுடைய உறவினர்களால் இவர்களை அந்த இரண்டு தினங்களில் கூட பார்வையிட முடியாதுள்ளது. அதனால் அவர்களுக்கு நத்தார் பரிசுகளையும் கொடுத்துவிட்டு 100 உணவுப் பொதிகளையும் நாளை வழங்கவுள்ளதாக ஜயலத் ஜயவர்தன எம்.பி. தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 டிசம்பர் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.